Registered as a News paper in Ceylon

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற் பெட்டி எண் 49

மலர் 5 யாழ்ப்பாணம் சுபகிருது பங்குனி 5 ஆம் நாள் ஷவ்வால் 21 (18-3-63) திங்கட்கிழமை இதழ் 8

ஈழநாடு

சந்தா விபரம்

வாரப்பதிப்பு உட்பட

| | |
|---|---|
| ஒரு வருடத்துக்கு | ரூபா 40-00 |
| 6 மாதத்துக்கு | ரூபா 21-00 |
| 3 மாதத்துக்கு | ரூபா 11-00 |

# நேரடி இயக்கத்துக்கு முன்னேற்பாடுகள்

## சமஷ்டிப்பிரமுகர்கள் மீது தீவிர கண்காணிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழரசுக்கட்சியின் உத்தேச நேரடி இயக்க நடவடிக்கைக்கான நாள் நெருங்கிக் கொண்டிருப்பதன் காரணமாக தமிழரசுக்கட்சி முக்கியஸ்தர்களின் நடவடிக்கைகளில் பொலிசார் அதிக கவனம் செலுத்திவருகின்றனர்.

கட்சியின் முக்கியஸ்தர்களின் நடமாட்டத்தின்மீதும் மட்டுமல்ல கட்சி அனுதாபிகளின் நடமாட்டத்தினமீதும் பொலிசார் கண்காணிப்புச் செய்துவருகின்றனர்.

கட்சியின் முக்கிய அங்கத்தவர்கள் சிலரைப் பொலிசார் சந்தித்து விசாரணை செய்துள்ளதாகத் தெரிகிறது.

பாடசாலைகளை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதால் அரசியலிலிருந்து விலகியுள்ள ஆசிரியர்களைக் கூடப் பொலிசார் விசாரணை செய்துள்ளதாகத் தெரிகிறது.

## நூல் நிலையக் கட்டிடத்தில் ஏற்பட்டுள்ள வெடிப்பு

### ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் விசாரணைசெய்ய யோசனை

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் பொது நூல் நிலையக் கட்டிதித்தில் ஏற்பட்டுள்ள வெடிப்பு சம்பந்தமாக விசாரணை நடத்தி கட்டிட ஒப்பந்தக்காரர்மீது எவ்வித நடவடிக்கை எடுப்பதென்பது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி ஒருவரின் சேவையைப் பெறுவதுபற்றி யோசனை செய்யப்பட்டுவருவதாகத் தெரியவருகிறது.

கட்டிடததில் ஏற்பட்டுள்ள வெடிப்புக்கள் சம்பந்தமாக தென்னிந்திய சிற்பக்கலை நிபுணர் திரு. வி. எம். நரசிம்மனை அழைத்து ஆராய்வது டற்றி இருந்த யோசனை சிலபல காரணங்களினால் தற்போது கைவிடப்பட்டுள்ளதாகவும் வெடிப்புக்களை எப்படிச் சீர்செய்யலாமென்பது பற்றி இலங்கை மராமத்து இலாகாவைச் சேர்ந்த கட்டிட கலைநிபுணர் ஒருவரின் சேவையை பெறுவதற்கு யோசனை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## பரீட்சை நிலையத்தில் மாணவர் குழப்பம்!

### மேற்பார்வையாளர் மீது கற்கள் வீசப்பட்டன!

கம்புறுபிட்டிய, திங்கள்

மாத்தறையில் இரண்டு ஜி. ஸி. ஈ (சாதாரண) பரீட்சை நிலையங்களில் குழப்பமேற்பட்டதாக அறிவிக்கப்பட்டுளளது. ரோகண வித்தியாசாலையிலுள்ள ஜி. ஸி. ஈ. (சதாரணம்) பரீட்சை நிலையத்தில் சில பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளர்மீது கற்களை வீசினர்களென்றும் கூரைகளுக்கும் கற்கள்வீசி, பல ஓடுகளை உடைத்தார்கள் என்றும் கூறப்படுகிறது.

கூரைகளுககு கற்களால் எறிந்து ஓட்டுகளை உடைத்த பரீட்சார்த்திகள் பின்னர்பாடசாலைகளுச்குரிய தென்னைமரங்களில் ஏறி, இளநீர் பறித்தார்கள். தென்னைமரத்தில் பறிக்கப்பட்ட இளநீரைப் பின்னர் பிரதான வீதிக்குக் கொண்டு வந்தார்கள்.

வீதிகளில் இருந்த ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சை மாணவர்கள், இளநீரைப் பருகிக் கொண்டே போக்குவரத்துக்குத் தடைசெய்தனர். இதனால் போக்குவரத்துக்கள் 15 நிமிட நேரத்துக்குத் தடைப்பட்டன.

இந்தச் சம்பவங்களில் மாத்தறையிலுள்ள இரண்டு பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள் எனத் தெரியவருகிறது.

கபடவீதிய என்ற இடத்தில் ஜி. ஸி. ஈ. (சாதாரணம்) பரீட்சார்த்திகள், காவற்காரர் ஒருவர்மீது கற்கள் வீசியதுடன் மேற்பார்வையாளர் ஒருவரையும் துன்பப்படுத்தினர்.

இதுசம்பந்தமான விசாரணைகள் நடைபெற்று வருகிறது.

## தொண்டர்களைத் திரட்டுதல் மக்களைத் தயார்செய்வது!

### கிளிநொச்சியில் சமஷ்டி கட்சிக் கமிட்டி தீர்மானம்

கிளிநொச்சி, ஞாயிறு

அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவிருக்கும் நேரடி நடவடிக்கைக்கு புதிதாகத் தொண்டர்களை தமிழ்ப்பகுதிகளிலுள்ள ஒவ்வொரு தொகுதிகளிலும் சேர்ப்பதென்றும் பழைய தொண்டர்களை அழைத்து நேரடி போராட்டத்துக்கு அவர்களைத் தயார் செய்வதென்றும், அந்தப் பொறுப்பை அந்தந்தத் தொகுதித் தமிழரசுக்கட்சி எம். பி. க்களிடம் விடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிளைகள் உள்ள இடங்களில் தொண்டர்களைச் சேர்த்து அவர்களைப் பதிந்து நேரடி நடவடிக்கைக்கு அவர்களைத் தயார் செய்வதென்றும், கிளைகள் இல்லாத இடங்களில் விரைவில் கிளைகளை நிறுவி புதிய தொண்டர்களைச் சேர்த்து அவர்களைப் பதிந்து கொள்ளும் வேலைகளை தமிழரசுக்கட்சி எம். பி. க்களிடம் விடுவதென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இன்று பிற்பகல் 4 மணிக்கு பத்திரிகைகளுக்கு ஒரு அறிக்கை விடப்பட்டது. அடுத்த மாதம் 6-ந் திகதி வவனியாவில் நடைபெறவிருக்கும் பொதுக்காரிய சபைக் கூட்டத்திற்கு முன்பு நேரடி நடவடிக்கைத் திட்டங்களைப் பூர்த்தியாக்கவேண்டுமென்று நேரடி நடவடிக்கைக் குழுவுக்கு மத்திய செயற்குழு ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழரசுக்கட்சியின் காரியக் கமிட்டிக் கூட்டம் நேற்று சனிக்கிழமை பிற்பகல் கிளிநொச்சி எம் பி. திரு. ஏ. சிவசுந்தரம் இல்லத்தில் ஆரம்பமானது. நேற்றிரவு வெகு நேரம் வரை நடைபெற்றபின் இன்று காலை மீண்டும் தொடர்ந்து நடைபெற்றது. இன்று காலை நடைபெற்ற கூடடத்துக்கு கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் தலைமை வகித்தார்.

இன்று பிற்பகல் வரை கூட்டம் தொடர்ந்து நடைபெற்றது. சென்ற வருடம் மன்னாரில் நடைபெற்ற கட்சியின் வருடாந்த மகாநாட்டில் தீர்மானித்தபடி அடுத்த மாதம் 17-ந் திகதிக்குப் பிந்தாமல் நேரடி நடவடிக்கையை ஆரம்பிப்பதென்று கமிட்டி தீர்மானித்துளளது.

போராட்டத் திட்டங்கள் யாவும் பரம இரகசியமாக வைக்கப்பட வேண்டுமெனக் கமிட்டி முடிவு செய்துள்ளதாகத் தெரிகிறது.

நேரடி நடவடிக்கைக்கு மக்களைத் தயார் செய்து அவர்களது ஆதரவைத் திரட்டும் பொருட்டு தமிழ்ப் பேசும் பகுதிகளில் பிரசாரக் கூட்டங்கள் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

## ரஷ்யாவின் சாதனை

மாஸ்கோ, மார்ச் 17

அமெரிக்காவின் 'மரைனர் 2' என்ற வான வெளி தகவல் கிரகத்தின் சாதனையை சோவியத் யூனியனின் 'மார்ஸ்' என்ற தகவல் கிரகம் முறியடித்து விட்டதாகவும் 6 கோடி பத்து லட்சம் மைல் தூரம் இக்கிரகம் பிரயாணம் செய்துள்ளதாகவும் இன்னமும் அது பூமியுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும் சோவியத் விஞ்ஞானியொருவர் தெரிவித்துள்ளார். ஜூன் மாதத்தில் இக்கிரகம் இன்னும் அதிக தூரம் செல்லுமென்றும் அவர் கூறினார்.

## ஏப்ரல் 8-ல் தமிழ்வாரம்

கிளிநொச்சி, திங்கள்

நேற்றுக்கூடிய தமிழரசுக் கட்சியின் செயற்குழு, நேரடி நடவடிக்கைக்கு ஆரம்பமாக ஏப்ரல், 8-ம் திகதி தொடக்கம் 14-ந் திகதிவரை தமிழ்வாரமாக அனுஷ்டித்து, "எல்லாம் தமிழ்" இயக்கத்தை அப்போதுவிஸ்தரிக்கவேண்டுமெனத்தீர்மானித்தது.

## சின்னம்மை

ருகம, ஞாயிறு

வல்பொல என்ற இடத்தில் சின்னம்மை நோய் பரவியிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இதன் காரணமாக சுமார் 15 குடும்பங்கள் சின்னம்மை நோயினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

சின்னம்மை நோய், விரைவாக இப்பகுதியில் பரவிக் கொண்டு வருகிறது.

## பிரிவிடுதல் நொத்தீஸ்

சாவகச்சேரி டிஸ்றிக்கோட்டில்

எழுதுமட்டுவாள் தெற்கு கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை —வழக்காளி

எதிராக

(1)பருத்தித்துறை தாமோதரம் பிள்ளை —எதிராளி

1. உடுப்பிட்டி வீரவாகு சிவ குருநாதர் பெண் மங்கையர்க் கரசி, 2. வீரவாகு சிவகுரு நாதர், தனக்காகவும், பராமரிப்பு மற்ற 3-ம் எதிரிக்காகவும், 3. தாமோதரம்பிள்ளை குல சிங்கம் 2-ம் எதிரி பராமரிப்புக் காரர், 4. பெரியபளை மாணிக் கம் கைம்பெண் வள்ளிப் பிள்ளை, 5. மாணிக்கம் நட ராசா— 6. மாணிக்கம் நல்ல துரை 4-ம் எதிரி பராமரிப் புக்காரி, 7. பெரியபளை பொன்னையா தியாகராசா, 8. டி தம்பர்பிள்ளை வேலுப் பிள்ளையும் 9. பெண் வள்ளிப் பிள்ளையும், 10. டி வீரசிங்கம் கந்தையா, 11. டி வீரசிங்கம் செல்லையா, 12. டி வீரசிங் கம் சேனாதிராசா, 13. டி வீர சிங்கம் சுப்பிரமணியம், 14. டி தம்பையா பொன்னையா, 15. பெண் சிவக்கொழுந்து, 16. டி வேலுப்பிள்ளை பொன் னையா, 17. பெண் அன்னலட் சுமி, 18. டி மாணிக்கம் சேனாதிராசா, 19. டி மாணிச் கம் குமாரசாமி, 20. பளை கணபதிப்பிள்ளை பிள்ளையினர், 21. எழுதுமட்டுவாள் தெற்கு, வேலுப்பிள்ளை பொன்னையா, —கூட்டு எதிராளிகள்.

இல. 2323 / P

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பச்சிலைப்பளிப் பகுதி புலோப்பளைக் கோவிற் பற்று பெரியபளை இறை"கனக சுந்தரமுதலியா வளவும் மறு பிரிவுகளும்" நிலப்பரப்பு 300 மூன்னூறுஎல்லைகிழக்கும் வடக் கும் மேற்கும் தெற்கும் தாமோ தரம்பிள்ளை செல்வகுலசிங்கம் கைம்பெண் பரமேஸ்வரிக்குரிய வாதனம். என்னும் ஆதனம் அல்லது ஆதனங்களை 1951 ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதற் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோர்ட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல் வழக்கு தொடர்ந்திருக்கின்ற தென்று இத்தாலுமக் கறிவிக் கப்படடிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோட்டில் 1963ம் ஆண்டு வைகாசி மீ 21 உ 10 மணிக்குச் சமுகமளிக்கும் படி கட்டளைபண்ணப்பட்டிருக் கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி

சக்கிடுத்தார்

1963ம் ஆண்டு பங்குனி மீ 15ம்உ

## விளம்பரம்

### காங்கேசன்துறை பட்டினசபை

காங்கேசன்துறைப் பட்டின சபையின் பாவிப்புக்காக 4அடி நீளமும் 3 அடி அகலமுமுள்ள ஒரு கொடிச் சீலையில் தரை யில் இரு எருதுகள் பூட் டப்பட்ட ஏரில் ஒரு உழ வன் பிடித்துழுகிற மாதிரி யும், ஒரு தென்னை மரமும் ஒரு பனை மரமும் நிற்கிற மாதிரியும், கடலில் ஒரு வள் ளத்திலிருந்தொருவன் தண்டு வலிக்கிற மாதிரியும் சித்திரங் கள் வரையப் பெற்றதான தொன்றைச் சரிக்கட்டித் தரு வதற்கு முதலில் ஒரு கடதாசி யில் குறிப்பிட்ட சித்திரங்கள் வரையப் பெற்றுத் தலைவர், பட்டினசபை, காங்கேசன் துறை என்ற விலாசத்திற்கு 25-3-63-ந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப் பப்படல்வேண்டும். கிடைத்த சித்திரங்களில் சபைக்குத் திருப்தியானதொன்று தேர்ந் தெடுக்கப்படுங்கால் அக்குறிப் பிட்ட சித்திரக்காரரைக் கொண்டு கொடிச்சீலை சரிக் கட்டும் ஒழுங்குகள் செய்யப் படும்.

மு. திடவீரசிங்கம்,
தலைவர்,
பட்டின சபை,
காங்கேசன் துறை.

பட்டினசபை அலுவலகம்,
காங்கேசன் துறை.
15-3-63 779

# "புதுவருடத்துக்கு புத்தாடை கிடையாது"

## அரசாங்கமே முழுக்காரணம் என்கிறார் காலி எம். பி.

காலி, ஞாயிறு

"இந்த ஆண்டின் புதுவருட தினத்தை, மகிழ்ச்சியுடன் கொண்டாடவிருக்கும் மக்கள், புது ஆடைகளை அணியாமல் பழைய ஆடைகளை அணிந்து கொண்டே புதுவருடத்தைக் கொண்டாடுவார்கள். இந்த நிகழ்ச்சி சரித்திரத்தில் இடம் பெறக்கூடியதொன்றாகும்".

காலி எம். பி. திரு. டபிள்யு. தஹநாயக்கா, நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்த ஒரு செய்தியில் மேற்கண்ட வாறு தெரிவித்துள்ளார்,

பத்திரிகைச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்திருப்ப தாவது:

'அடுத்த மாதம் வரவிருக் கும் சிங்கள - தமிழ் புதுவரு டம் இம்முறை சிறப்பாகக் கொண்டாடப்படுவதற்குரிய அறிகுறிகள்காணப்படவில்லை'. துணிமணிகளின் விலைகள் அதி கரிக்கப்பட்டிருப்பதே இதற்கு முக்கிய காரணமாகும்.

சோதிடர்கள் கூறும் நிறங் களுடைய உடைகளை, புது வருடத் தினத்தன்று அணி வது ஒரு வழக்கமாகி வரு கிறது. புதுவருடப்பரிசுகளாகத் துணிகள் தான் வழங்கப் படும். ஆனால் இவற்றின் விலை இப்பொழுது மிகவும் அதி கரித்திருப்பதால், எதிர் வரும் புத்தாண்டில் புதிய ஆடை களை அணிந்து, மக்கள் மகிழ்ச்சி கொண்டாடமாட்டார் கள் என்றே நான் கருதுகின் றேன். எதிர்பார்க்க முடியாத இந்த நிலைமை உருவானதற்கு அரசாங்கமே முழுப் பொறுப் பாகும்.

இலங்கையில் தயாரிக்கப் பட்ட சாரம் ஒரு வருடத் துக்கு முன்னர், கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தா பனத்தினரால் ரூ. 3-50க்கு விற்பனை செய்யப்பட்டது. இதே சாரம் சில மாதங்கள் கழித்து ரூ. 5-60 ஆக விற் பனை செய்யப்பட்டது. ஆனால் இந்தச் சாரம் இப்பொழுது ரூ. 7-10 ஆக விற்பனை செய் யப்படுகிறது. ஒரு வருட காலத்துக்குள் இந்தச் சாரத் தின் விலை உயர்ந்தற்குரிய காரணங்களை எவரும் கூற முடியுமா?

ஜப்பான் பப்ளின், ஒரு யார் ஒரு வருடத்துக்கு முன் னர் ரூ. 1-40 ஆக விற்பனை செய்யப்பட்டது. ஆனால் இது இப்பொழுது ரூ 3-25 ஆக விற்பனை செய்யப்படுகிறது இந்த வகையான துணி, இங்கு அதிகமான அளவில் உபயோகிக்கப்படுகிறது.

வெள்ளவத்தை ஆலையில் தயாரிக்கப்படும், ஒரு வகைத் துணி, யார் ஒன்று 90 சத மாக விற்பனை செய்யப்பட் டது. ஆனால் (ஒரு வருட காலத்துக்குப் பின்னர்) இப் பொழுது இது ரூ 1-50 ஆக விற்பனை செய்யப்படுகிறது. இதனால் ஏராளமான தொழி லாளர்கள் பாதிக்கப்பட்டுள்ள னர் இங்கு தயாரிக்கப்படும் துணிகளுக்கான விலைகளை அர சாங்கம் ஏன் கட்டுப்படுத்த முடியாதென்பது புரியாத புதி ராகவிருக்கிறது.

மேற்கண்ட தகவல்களிலி ருந்து, 1963-ம் ஆண்டு புது வருடம் மிகுந்த துக்ககரமான- புத்தாடைகளில்லாத புது வருடமாக விளங்கும் என் பது தெளிவாகிறது.

## வரி விளம்பரம்

### தேவை

கால்நடை, கோழி உணவு விற்பனைக் கடையில் பொறுப் புடன் வேலை செய்யக்கூடிய படித்த நேர்மையான இளை ஞன் தேவை. ராணி ஸ்ரோர்ஸ், சங்கானை என்ற விலாசத்திற்கு இம்மாதம் 25-ந் திகதிக்கு முன் நேரில் வரவும். 780

### விற்பனைக்கு

கொக்குவில் புதிய புகை யிரத நிலையத்திற்கு அருகாமை யிலுள்ள வீடு கட்டக்கூடிய $7\frac{3}{4}$ பரப்பு விஸ்தீரணம் உள்ள காணி விற்பனைக்கு உண்டு. பரப்பு ஒன்று ரூ. 5000. தேவை யானோர் பாலசுப்பிரமணியம், திருமதி சிற்றம்பலம் மேற் பார்த்து, கல்லூரி ஒழுங்கை, கொக்குவிலில்சந்திக்கவும். 77

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர் கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்ற லோக் இனும். தொய்வுககு 10 நாள் மருந்து 12/50 நீரிழி வுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணநந்தர் லைலாயபிள்ளையார் கூ. கோவி லடி, யாழ்ப்பாணம்.

## மசானி உபதேர்தலில் போட்டியிடமாட்டார்

சென்னை, மார்ச் 17

ராஜாஜியுடன் கட்சி விஷய மாக விவாதிப்பதற்காக சென்னை வந்துள்ள சுதந்திரக் கட்சிப் பொதுக் காரியதரிசி திரு. எம். ஆர். மஸானி தாம் பெல்காம் பார்லிமெண்ட் தொ குதி உபதேர்தலில் போட்டி யிடப்போவதில்லை என்று ஒரு பேட்டியில் கூறினர்.

ஆளும் கட்சி மீண்டும் இந்த ஸ்தானத்தைக் கைப்பற்ற உதவக்கூடியவகையில் உள்ள மும்முனைப் போட்டி தவிர்க்கப் படவேண்டும் என்ற கட்சிக் கொள்கையை அனுசரித்தே தாம் இவ்வாறு முடிவுசெய் திருப்பதாக அவர் கூறினர்.

இந்தத் தொகுதியில் பொ துத் தேர்தலின்போது குடி யரசுக் கட்சி அபேட்சகர் திரு. காட்டி, காங்கிரசுக்கு எதிராக நின்று வெற்றிபெறுவதற்கு சொற்ப வோட்டுகளே குறை வாகப் பெற்றிருந்தார் என் பதையும் திரு. மஸானி நினைவு படுத்தினர்.

திரு. மஸானி சென்னையில் ராஜாஜியுடன் பேசிவிட்டு பம்பாய்க்குப் பிரயாணமானர்.

## "ஒரே ஒரு விஷயத்தில...."

கோவை, மார்ச் 17

ராஜாஜி சொல்கிறபடி மேலை நாடுகளுடன் இந்தியா சேர்ந்து விடுவதைத் தாம் விரும்ப வில்லை என்று திரு. கிரி கூறி னர். மேலைநாடுகள் முன்வந்து உதவியளிப்பதேநேருஜி கொள் கை சரியானது என்பதை உறுதிப்படுத்துவதாக அவர் கூறினர். சிலகம்யூனிஸ்ட் நாடு கள் மறைமுகமாக இந்தியா வுக்கு ஆதரவு தருகின்றன என்று அவர் கூறினர். கோவை ரோட்டரிக் கிளப்பில் பேசிய திரு கிரி, ராஜாஜி தமது குரு வென்றும் பலவிஷயங்களை அவ ரிடமிருந்து தாம் கற்றுக்கொண் டிருப்பதாகவும இன்றும் அவ ரிடம் தமக்கு மதிப்பு உண் டென்றும் ஆனல் மேலைநாடுக ளுடன் சேரும் விஷயத்தில் அவர் சொல்வதை மட்டும் ஏற் பதற்கில்லை என்றும் கூறினர்.

## யுனெஸ்கோ உதவி

டேராடூன், மார்ச் 17

இளம் விஞ்ஞானிகளுக்குப் பயற்சி தரவும் சர்வகலாசாலை ஆசிரியர்களுக்கு பயிற்சிதரவும் 'யுனெஸ்கோ' ஆதரவில் 10 இந் திய சர்வகலாசாலைகளில் 10 ஆராய்ச்சி ஜெந்திரங்கள் அடு த்த ஆறு ஆண்டுகளில் ரஷ்ய உதவியுடன் நிறுவப்பட விருக் கிறது. சோவியத்தூதர் பென் டிக்டாக் இதனை அறிவித்துள் ளார்.

மாவிட்டபுரம் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்

# சந்தேக நபர்கள் பிணையில் செல்ல அனுமதி

மாவிட்டபுரம், ஞாயிறு

மாவிட்டபுரம் தச்சகடவை மடத்தடி ஒழுங்கையில் இம் மாதம் 2ம் திகதி நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகச்சம்ப வம் சம்பந்தமாக சந்தேகத்தின் மீது கைது செய்யப்பட்ட சகோதரர்களான சின்னத் தம்பி இராமையா, கனகரத்தி னம். பாலசிங்கம் ஆகிய மூவ ரையும் மல்லாகம் மஜிஸ்டிரேட் திரு. வெள்ளி டி. தாமோதரம். சில சாட்சியங்களைப் பதிவு செய்தபின் தலா 5000 ரூபாய் பிணையிற் செல்ல அனுமதியளித் தார்.

இத்துப்பாக்கிப் பிரயோகத் தில் மினுயர் கதிரவேலு மரண மானர். கந்தையா நவரத்தினம் காயமடைந்தார்.

சந்தேக நபர்கள் மூவரும் மல்லாகம் மாஜிஸ்டிரேட் முன் னிலையில் ஆஜர் செய்யப்பட்ட போது காங்கேசன்துறை குற் றப் பிரிவு இன்ஸ்பெக்டர் திரு. கந்தையா கோட்டில் இச்சம்ப வம் சம்பந்தமாக றிப்போட் டைச் சமர்பித்து, விசாரணை யின் போது எடுத்த ஒரு துப் பாக்கி, வாள்போன்ற கத்தி, வில்லுக்கத்தி,சன்னம்,காட்றிஜ் அடிக்கட்டை ஆகியவற்றைச் சமர்த்து இவற்றை அரசாங்க பரிசோதகரின் பரிசோதனைக்கு அனுப்ப அனுமதி தரும்படி கேட்டார். கத்திகளில் இரத் தம் தோய்ந்து இருப்பதாகவும் அவர் கூறினர். நீதிபதி இதனை ஏற்று அரசாங்க பரிசோதக ரின் பரிசோதனைக்கு அனுப்ப உத்தரவிட்டார்:

காலஞ்சென்றவரின் பிரே தத்தைப் பரிசோதனை செய்த கங்கேசன்துறை உதவி மாவட்டவைத்திய அதிகாரி டாக்டர். சண்முகநாதன் தமது அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

காலஞ்சென்றவரின் மனைவி முத்தபிள்ளை சாட்சியமளிக்கை யிற் கூறியதாவது:-

இம்மாதம் 2ம் திகதி காலை 8 மணிக்கு காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு மருந்து கட்டச் சென்ற எனது கணவர் திரும் பிவரவில்லை.

நீதிபதி:- என்ன காயத்திற்கு மருந்து கட்டச்சென்றார்.

சாட்சி:- சந்தேகநபர்கள் முன் னர்கழுத்தில்பின்புறத்தில் உளி யால்குத்திஏற்படுத்திய காயத் திற்கு மருந்து கட்டச்சென்றார்.

சாட்சி தொடர்ந்து சாட்சிய மளிக்கையில் கூறியதாவது:-

எனதுகணவர் என்னிடம் இரண்டாவதுசந்தேக நபரான கனகரத்தினம்தான் உளியால் குத்தினது என்று கூறியிருக் கிறார் இக்காயத்தினல், 14நாள் ஆஸ்பத்திரியில்இருந்தார் 2வது சந்தேக நபர்தான் குத்தினது என்று என்னிடம் சம்பவத் துக்கு எத்தனை நாட்களுக்கு முன் கூறினர். என என் னல் சொல்லமுடியாது. ஆஸ் பத்திரியால் ஒரு புதன் கிழமை வெளியே வந்தார் அடுத்த சனிக்கிழமை சம்பவம்நடந்தது.

சந்தேக நபர்களின் சார்பில் ஆஜரான சிரேஷ்ட வழக்கறி ஞர் திரு. கே. வி எஸ் சண்முக நாதன் நீதிபதியிடம் இப் போது அளிக்கப்பட்ட சாட்சி யங்கள் சந்தேக நபர்களுககு எதிராக கொலைக குற்றம் சாட்டபோதாது என்றும், சந் தேகநபர்கள் 14 நாட்கள் ரிமாண்டில் இருந்திருப்ப தாலும் பொலிசார் வழக்கை இன்னும் தாக்கல் செய்யாதப டியாலும் சந்தேகநபர்களை மேலும் ரிமான்டில் வைத்திருப் பது நீதியல்ல எனக்கூறி சந் தேகநபர்களை பிணையில் விடக் கோரினர். சிலசாட்சியங்களின் பின்நீதிபதிசந்தேகநபர்களை தலா 5000 ஆதனப் பிணையில் செல் லும்படியும் இம்மாதம் 29ம் திகதி கோட்டில் ஆஜராகும்படி யும் உத்தரவிட்டு விசாரணைறை அத்தினத்துக்கு ஒத்திவைத் தார்.

## சாகித்திய சம்மேளனம்

குருநாகல், ஞாயிறு

நேற்று மாலை குருநாகல் நகர மண்டபத்தில் நடைபெற்ற சாகித்திய சம்மேளன கூட்டத் தில் கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லாவும் கல ந்துகொண்டார். வித்தியாலங் கர பல்கலைக் கழகத் துணை வேந்தர் தலைமையில் நடை பெற்ற இக்கூட்டத்தல் கவர் னர் ஜெனரல் பேசுப்பொழுது இலக்கிய வளர்ச்சி அறிவு அபி விருத்திக்கு உதவிசெய்யும் எனக்குறிப்பிட்டார். பேச்சு, கட்டுரை சிறுகதைப் போட்டி களில் பரிசுபெற்றோருக்கு கவர் னர் ஜெனரல் பரிசில்களை வழங்கினர். குருநாகல் எம். பி. திரு ஜயபத்திராவும் கூட் டத்தில் கலந்துகொண்டார்.

## ராஜதுரை தந்தி

கிளிநொச்சி, ஞாயிறு

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்துக்கு மட் டக்களப்பு முதலாவது எம். பி திரு.சி. ராஜதுரை வரவில்லை. கட்சித்தலைவருக்குஅவர் அனுப் பியிருந்த ஒரு தந்தியில் நிர்வா கசபையின தீர்மானங்களைத் தான் செயல்படுத்தத் தயா ராக இருப்பதாகத் தெரிவித் துள்ளார்.

# இசையாளர் வருகை முற்றாக நிறுத்தப்படும்

யாழ்ப்பாணம், திங்கள்

இந்தியாவிலிருந்து இலங் கைக்கு இசையாளர் வருவது 1965-ம் ஆண்டில் முற்றாக நிறுத்தப்பட்டுவிடுமென அறி யப்படுகிறது. வருடா வருடம் இந்தியாவிலிருந்து இலங் கைக்கு இசையாளர்கள் வந்து கொண்டிருந்தனர். அதுவும் முக்கியமாக இந்து ஆலயத் திருவிழாக்காலங்களில் அவர் கள் இங்கு வருவதுண்டு. இசையாளர்களை இங்கு கோட்டாமுறையில் அழைப்ப தற்கு அரசாங்கம் இப்பொழுது அனுமதித்துள்ளது. 'கோட்டா'முறை அமுலுக்கு வந்த முதல் வருடத்தில் 25 இசையாளர்கள் இங்கு அழைக்கப்பட்டனர். இரண்டா வது வருடத்தில் 12 பேர் அழைக்கப்பட்டனர். இவ்வரு டத்தில் எட்டுப் பேர்களை மட் டுமே அழைக்க முடியும். அடுத்த வருடம் இத்தொகை யும் குறைந்து அதற்கு அடுத்த வருடத்தில் இசையாளர்களை இங்கு வருவிப்பது முற்றாக நிறுத்தப்படும் என்றும் தெரி கிறது.

# கொழும்பு யோசனைகள் - விளக்கங்களில் வித்தியாசமில்லை

## கெய்ரோ வட்டாரங்கள் விளக்கம்

செய்ரோ, மார்ச் 17

சீன-இந்திய எல்லைப் பிரச்னைக்குச் சமரசத் தீர்வுகாணு முகமாக கொழும்பில்கூடிய ஆறு ஆசிய-ஆபிரிக்க நடுநிலைமை நாடுகள் தெரிவித்த யோசனைக்கு புதுடில்லியிலும் பீக்கிங்கிலும் வெவ்வேறு விளக்கங்கள் கொடுக்கப்படவில்லையென்றும் ஒரே மாதிரியான விளக்கங்களே கொடுக்கப்பட்டனவென்றும் ஐக்கிய அரபுக் குடியரசு வெளிவிவகார இலாகா வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு யோசனைகளுக்கு பீக்கிங்கில் கொடுக்கப்பட்ட விளக்கங்களுக்கும் புதுடில்லியில் கொடுக்கப்பட்ட விளக்கங்களுக்குமிடையில் அதிக வித்தியாசமிருப்பதாகவும் விளக்கங்களிலும் கொழும்பு யோசனைகளிலும் முன்னுக்குப் பின் முரணான அம்சங்கள் பல இருப்பதாகவும் சீன உதவிப் பிரதமரும் வெளிவிவகார மந்திரியுமான மார்ஷல் சென்-யீ சென்றவாரம்சுவீடன் ரேடியோ நிருபருக்கு அளித்தபேட்டியொன்றில் தெரிவித்திருந்தார்.

மார்ஷல் சென்-யீயின் இக்கூற்றை ஐக்கிய அரபுக் குடியரசு வெளிவிவகார இலாகா வட்டாரங்கள் மறுத்ததுடன் பீக்கிங், புதுடில்லி ஆகிய இடங்களில் கொடுக்கப்பட்ட விளக்கங்களுக்கிடையில் வித்தியாசம் இருக்கிறதென்பதையும் மறுத்தது.

இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தான் புதுடில்லிக்கும் பீக்கிங்கிற்கும் சென்று கொழும்பு யோசனைகளுக்கு விளக்கம் கொடுத்தாரென்றும் எழுத்துமூலம் கொடுக்கப்பட்ட இந்த விளக்கங்களுக்கிடையில் அதிக வித்தியாசமிருக்க முடியாதென்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு யோசனைகளுக்குக் கொடுக்கப்பட்ட விளக்கங்களில் அதிக வித்தியாசமிருப்பதாக மார்ஷல் சென்-யீ கூறியதற்கு புதுடில்லியில் இந்திய வெளிவிவகார இலாகா அதிகாரி ஒருவரும் மறுப்புத் தெரிவித்தார்.

## ரூ. 48 கோடி

புதுடில்லி, மார்ச் 17

இந்திய தேசிய பாதுகாப்பு நிதியின் மத்திய கணக்கில் நேற்றுவரை 47 கோடியே 98 லட்சம் ரூபாய் சேர்ந்துள்ளது. பிரிட்டனிலிருந்து கிடைத்த 48 லட்சம் ரூபாயும் இதர வெளிநாடுகளிலிருந்து கிடைத்த 42 லட்சம் ரூபாயும் இத்தொகையில் அடங்கும். இது தவிர தங்கமும் தங்கநகைகளுமாக 16 லட்சத்து 50 ஆயிரத்து 634 கிராம் சேர்ந்துள்ளது.

## மலேசியா

### உச்சி மகாநாட்டில் மலாயா பங்குபற்றும்

கோலாலம்பூர் மார்ச் 17

மலேசியா சம்மேளன அமைப்புச் சம்பந்தமாகப் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி மகப்பகல் கூட்டவிருக்கும் உச்சிமகாநாட்டில் மலாயா கலந்துகொள்ளும் என்று மலாயா உதவிப் பிரதமர் திரு. துங்கு அப்துல் ரஸாக் கூறினார். பிலிப்பைன்ஸிடம்மலாயாவுக்குப பூரண நம்பிக்கையிருக்கிறதென்றும் ரஸாக் கூறினார்.

# சீனாவின் குற்றச்சாட்டை இந்தியா நிராகரித்தது

புதுடில்லி, மார்ச் 17

லடாக் பகுதியில் ஸ்பாங்கூர் நதிப்பகுதியில் இந்தியத்துருப்புக்கள் சீனப்பிரதேசத்தில் ஊடுருவல் செய்ததாக சீனா குற்றஞ்சாட்டியதை இந்திய அரசாங்கம் மறுத்துள்ளது.

சீனாவுக்கு இந்தியா அனுப்பியுள்ள ஒரு குறிப்பில் சீனாவின் குற்றச்சாட்டை மறுத்துள்ளது. ஸ்பாங்கூர் நதிப் பகுதி இந்தியப் பிரதேசத்தின் ஒரு பகுதி என்பதையும் இந்தியா சுட்டிக்காட்டியுள்ளது.

எல்லைப் பிரச்னை சம்பந்தமாக இந்தியாவும் சீனாவும் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இந்தியாவைப் போலவே சீனவும் கொழும்பு யோசனைகளை நிபந்தனையின்றி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் இந்தியா மற்றொரு குறிப்பில் தெரிவித்துள்ளது.

# இந்தியச் செய்திகள்

## நினைவுச் சின்னங்களை பேணிக்காக்க சட்டம்

சென்னை, மார்ச் 17

தேசிய முக்கியத்துவம் அல்லாத இதர நினைவுச்சின்னங்களையும் பேணிக்காப்பதற்காகச் சட்டம் கொண்டுவர ராஜ்ய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது.

∴ ∴ ∴

## மாடு முட்டி மாணவன் மரணம்

திருப்பத்தூர், மார்ச் 17

இங்குள்ள கலாசாலையைச் சேர்ந்த மாணவன் இராமநாதன் என்பவர் மாடு ஒன்றினால் குத்தப்பட்டு அடுத்த நாள் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

∴ ∴ ∴

## நண்பர் போல் நடித்து மோசடி

வேலூர், மார்ச் 17

டாக்டர்களின் நண்பர்கள் என்று கூறிக்கொண்டுபலரிடம் மோசடி செய்ததாகக் கூறப்படும் இருவரை வேலூர் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இவர்கள் ஏற்கனவே இதுபோல 10 தடவைகள் மோசடி செய்துள்ளனராம்.

∴ ∴ ∴

## திரைப்படங்களுக்கு அரசாங்க பரிசு?

சென்னை, மார்ச் 17

தென் இந்திய மொழிகளில் தயாராகும் சிறந்த படங்கள் நடிகர்கள், டைரக்டர்கள், ஆகியோருக்குப் பரிசு வழங்க சென்னை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

∴ ∴ ∴

## எல்லோருக்கும் அனுமதி?

ராஜ்கோட், மார்ச் 17

லைசென்ஸ் பெறாத பொற்கொல்லர்கள் கூட ஒரு வரம்புக்குள் 14 காரட் தங்க நகைகளைச் செய்யலாமென அனுமதிக்கும் உத்தரவு இவ்வாரத்தில் பிறப்பிக்கப்படவிருக்கிறது என்று தங்க போர்டு தலைவர் திரு. ஜி. பி. கோடாக் இங்கு நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

∴ ∴ ∴

## இன்ஜினியரிங் மாணவர்கள்

சென்னை, மார்ச் 17

சென்னை ராஜ்யத்திலுள்ள இன்ஜினியரிங் கல்லூரிகளில் வருகிற வருடம் கூடுதலாக 385 மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள்.

∴ ∴ ∴

## தங்க போர்டின் புது முயற்சி

புதுடில்லி, மார்ச் 17

பளபளப்பான கண்ணாடி வளையல்களைத் தயாரிப்பதற்காக திரவ தங்கத்துக்குப்பதில் ரசாயனப் பொருள் ஒன்றை கண்டுபிடிக்க தங்கபோர்டு முயற்சித்து வருகிறது. பூர்வாங்க பரிசோதனைகளில் ரசாயன பொருள் திருப்திகரமாக உள்ளது என்று கூறப்படுகிறது.

∴ ∴ ∴

## ஸ்ரீ மீனாக்ஷி கோவில் கும்பாபிஷேகம்

மதுரை, மார்ச் 17

மதுரை ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் கோவிலின் கும்பாபிஷேகம் ஜூன் மாதம் 28-ம் திகதி நடைபெறும். ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதிகளும் ஜனாதிபதி ராதாகிருஷ்ணனும் இதில் கலந்துகொள்வார்கள் எனத் தெரியவருகிறது.

∴ ∴ ∴

## மதிய உணவு ரத்து

காரைக்குடி. மார்ச் 17

அண்மையில் நடைபெற்ற காரைக்குடி நகரசபை கூட்டத்தில் 63,64-ம் ஆண்டுகளில் ஏழை மாணவ மாணவிகளுக்கு மதிய உணவு வழங்குவதை நிதிப்பற்றாக்குறை காரணமாக நிறுத்தி வைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

∴ ∴ ∴

## பின்தங்கிய வகுப்பு

சண்டிகார், மார்ச் 17

1000 ரூபாவரை ஆண்டு வருமானம் உடையவர்கள் பஞ்சாபில் இனிமேல் பின்தங்கிய வகுப்பினராகக் கருதப்படுவர் ராஜ்ய விவசாய ஹரிஜன நல மந்திரி திரு. குர்பந்தாசிங் இப்புதிய முடிவை சட்டசபையில் தெரிவித்தார்.

∴ ∴ ∴

திண்டுக்கல், மார்ச் 17

பேஜன்பட்டி பஜனை மடத்தில் பேஜாக்கவுண்டரை அவருடைய மூத்த மகன் பெருமாளும் இளைய மகன் ரங்கசாமியும் மண்வெட்டியின் பின்புறத்தாலும், கோடரியின் பின்புறத்தாலும் அடித்து கொலைசெய்துவிட்டு தலைமறைவாக விருப்பதாகக் கூறப்படுகிறது.

## சாராயம் குடித்த நல்ல பாம்பு!

சீர்காழி, மார்ச்17

சீர்காழிக்கடுத்த அகைக்குடி கிராமத்தில், வேலாயுதம் என்பவரின் வீட்டை பொலிஸார் அண்மையில் சோதனை போட்டனர். சாராயம், பூமிக்குள் புதைக்கப்பட்டிருக்குமென பூமியை அவர்கள் தோண்டினர். இதன்பலனாக சாராய ஊறலும், ஒரு பானை நிறைய சாராயமும் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனல், அப்பானையின் கழுத்தைச்சுற்றி ஒரு நாகம் படமெடுத்த நிலையில் காட்சியளித்தது! பொலிஸார் இதைக் கண்டு திடுக்குற்றனர்! சிறிது நேரத்தின் பின்னர் அந்தப் பாம்பு இறந்துவிட்டது தெரியவந்தது.

அந்தப் பானையில் காணப்பட்ட துவாரத்தின் வழியாக அந்த நல்ல பாம்பு சாராயம் குடித்து, திக்குமுக்காடி போதையால் உயிர் நீத்திருக்கலாமெனக் கூறப்பட்டது.

# "கம்யூனிஸ்ட் இல்லாத தேசிய அரசாங்கம் வேண்டும்"

—ஜனசங்கத் தலைவர்

## "தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைகளை முறியடிக்க வேண்டும்"

—ராஜாஜி

சென்னை, மார்ச் 17

'சீனா மீண்டும் தாக்கும்வரை நாம் காத்திருக்கக் கூடாது. நமக்கு அளிக்க முன்வந்து நாம் பயன்படுத்திக் கொள்ளாமலிருந்து வரும் ராணுவ உதவி வாக்குறுதிகளை காலாவதியாகும்படி விட்டுவிடலாகாது' என்று அகிலஇந்திய ஜனசங்கத் தலைவர் டாக்டர் ரகுவீரா சென்னையில் பத்திரிகை நிருபர்க்களித்த பேட்டியொன்றில் குறிபபிட்டார்.

தற்போதைய நெருக்கடிநிலைமையில் ஒருதேசிய அரசாங்கம் ஏற்படுவது மகிழ்ச்சிக்குரியதென்று கூறிய அவர் மேலும் சொல்லியதாவது:

அத்தகைய தேசிய அரசாங்கம் நேரு தலைமையில் இருக்க வேண்டிய அவசியமில்லை. எல்லாக்கட்சிகளும் சேர்ந்து தலைவரைத் தேர்ந்தெடுக்கலாம். ஆனல் இந்தத் தேசிய அரசாங்கத்தில் கம்யூனிஸ்ட்கட்சியைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது தடை விதிக்க வேண்டும்.

பாதுகாப்பு முயற்சிகளில் கம்யூனிஸ்டுகளை அரசாங்கம் அதிகமாக நம்பிவருவது துரதிருஷ்டவசமானது. இந்தியாவின் பலத்தையும் சௌரவத்தையும் வளர்த்துக் கொண்ட பின்புதான் சீனவுடனும்சரி பாகிஸ்தானுடனும்சரி பேச்சுவார்த்தைகள் பலனளிக்கக் கூடியதாக இருக்கும்.

### ராஜாஜி பேச்சு

டாக்டர் ரகுவீராவிற்கு நடத்தப்பட்ட விருந்துபசாரமொன்றில் ராஜாஜி பேசினர். தற்போது ஆட்சி நடத்திவரும் அரசாங்கத்தின் கொள்கைகளை முறியடிக்க வேண்டும் என்பதே சுதந்திராக்கட்சி, ஜனசங்கம் என்பனவற்றின் நோக்கமாகும் என்று கூறிய ராஜாஜி டாக்டர் ரகுவீராவிடமிருந்து தாம் பெருமளவு ஒத்துழைப்பு எதிர்பார்ப்பதாகவும் அவரும் அதனைத் தம்மிடம் எதிர்பார்க்கலாம் என்றும் சொன்னர்.

ராஜாஜி இவ்வாறு கூறுவதனை தங்களுக்குக் கிடைத்த ஆசியாகவும் ஆதரவாகவும் பாவிப்பதாக டாக்டர் ரகுவீரா கூறினர்.

## 'இந்தியா கோஷ்டி சேராதிருப்பது நல்லதே'

—அசோக்மேததா

சென்னை, மார்ச் 17

'வெளிநாடுகளுடன் நாம் கொண்டுள்ள உறவு முறை பற்றி மறுபரிசீலனை நடத்தி சில மாறுதல்களைச் செய்ய வேண்டிய ஒரு கட்டத்தை அடைந்துவிட்டோம். குறிப்பாக தென்கிழக்கு ஆசிய நாடுகளுடன் நமது உறவுமுறையை அபிவிருத்திசெய்து கொள்ள வேண்டிய கட்டத்தில் உள்ளவர்களாக இருக்கின்றோம்' என்று பிரஜா சோஷலிஸ்ட் தலைவர் திரு அசோக்மேத்தா, சென்னையில் நடைபெற்றகூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கடந்த பத்து ஆண்டு காலத்தில் உலக விவகாரங்களில் தேசிய வரம்புகள் சிறிது சிறிதாக மறைந்து தேசியத்துக்கு அப்பாற்பட்ட நலன்களின் ஆதிக்கம் மேலோங்கி வருவதாகக் கூறினர்.

தென்னமெரிக்கா நாடுகள் அமெரிக்கவுக்கும் சீன, ரஷ்யா நாடுகளுக்கும் ஒரு பிரச்னையாக மாறவிட்டதென்றும் அத்லாந்திப் பகுதி நாடுகளைப் பொறுத்தவரை ரஷ்யாவுக்கும் அமெரிக்காவுக்குமிடையே இந்தியா கோஷ்டி சேராதிருப்பது பொருத்தமே என்றும் அவர் கூறினர்.

## சென்னை வெற்றி

கொழும்பு, ஞாயிறு

நேற்று சுகததாசவிளையாட்டு அரங்கில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இலங்கைக் கோஷ்டியை சென்னைக் கோஷ்டி மூன்று கோல்களால் தோற்கடித்தது. இலங்கைக்கோஷ்டி ஒரு கோலும் அடிக்கவில்லை.



## சிறிமா கம்போடியா செல்வார்

நாம் பென், மார்ச் 17

கம்போடியாவுக்கு விஜயம் செய்யுமாறு கம்போடிய அரசாங்கம் விடுத்த அழைப்பை இலங்கைப் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா ஏற்றுக்கொண்டுள்ளாரென்று சம்போடிய தேசிய வானெலி அறிவித்தது. திருமதி சிறிமா எப்போது கம்போடியாவுக்கு விஜயம் செய்வாரென்பது பற்றி இன்னும் திகதி நிர்ணயிக்கப்படவில்லை. கம்போடியாவுக்கு மலி குடியரசு ஜனாதிபதியும் விஜயம் செய்ய இருக்கிறர்.

## சமரசத் திட்டம்

ஜெனிவா, மார்ச் 17

ஜெனிவா மகாநாட்டில் கலந்துகொள்ளும் நடுநிலைமை நாடுகள், மகாநாட்டில் சமர்ப்பிப்பதற்கு அணு ஆயுத சோதனைத் தடை சம்பந்தமாக ஒரு சமரசத் திட்டத்தைத் தயாரித்துள்ளன.

சென்னை, மார்ச் 17

நேற்று சென்னையில் நடைபெற்ற தென்னிந்திய டென்னிஸ் போட்டியில் ஒற்றையருக்கான இறுதி ஆட்டத்தில் திரு இராமநாதன் கிருஷ்ணன் வெற்றிபெற்ருர். திரு. முகர்ஜியை 6—1, 6—2 ஆட்டங்களில் திரு. கிருஷ்ணன் தோற்கடித்தார்.

### மணி வாக்கு

சத்தியம் அதாவது கடவுளை அடைய விரும்புபவரின் அடையாளமென்ன? கோபம், காமம், பேராசை, பற்று, தற்பெருமை, பயம், இவை அவருக்குச் சிறிதும் இரா. அவர் தன்னை பூஜ்யமாக்கிக் கொண்டு, பூரண புலனடக்கத்துடனிருப்பார்கள்.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு பங்குனி மீ 5 உ (18-3-63)

## கொழும்பு யோசனைகளும் சீனத்தின் போக்கும்

இந்தியாவுடன் நேர்முகமாகப் பேசி, எல்லைத் தகராறைச் சமாதானமாகத் தீர்த்துக் கொள்ள பீக்கிங் ஆவல் தெரிவிக்கின்றது. தன் உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கையைப் பற்றிய தேவைகளை முன்னிட்டு, இந்தியா உடனடியாகப் பேச்சுகள் நடத்த முடியாவிடில், சீனம் பொறுமையுடன் காத்திருக்குமென்றும் பிரபல சீனப்பத்திரிகை கூறுகின்றது. அந்தமட்டிலும் நல்லதுதான்.

இந்த எல்லைத் தகராறை சமாதானமாகப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்பதுதான் இந்தியாவின் ஆவலும். அப்படி இல்லாவிடில், கொழும்பு மகாநாடு கூறிய யோசனைகளை இந்தியா ஒப்புக் கொண்டிராது. மேலும், எல்லையிலே சீன ராணுவம் காலி செய்த பகுதிகளில் இந்தியா தன் துருப்புகளைக் கொண்டு செல்லாமல் இருப்பதுடன், இராணுவ நடவடிக்கையை எடுக்காமல் இருப்பதும் இந்தியாவின் சமாதான நோக்கத்துக்கு நல்ல அத்தாட்சிகள்.

ஆனால் கொழும்பு மகாநாடு கூறிய யோசனைகளை அப்படியே ஏற்க சீனம் தயாரில்லை. அந்த யோசனைகளைப் பற்றி டில்லியிலும் பீக்கிங்கிலும் வெவ்வேறு விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளதாகவும் இரண்டுக்கும் பெரிய வேற்றுமைகள் இருப்பதாகவும் பீக்கிங் வெளிநாட்டுமந்திரி புதிய கரடிவிடுகிறார். இரு இடங்களிலும் ஒரேவித விளக்கமே அளிக்கப்பட்டதாயும், யோசனைகளும் விளக்கங்களும் ஒன்றே என்றும் இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி ஏற்கெனவே டில்லி பத்திரிகை நிருபர் மகாநாட்டில் தெரிவித்துள்ளார். இருதேசங்களுக்கும் சென்றுநேரில்பேசிய இலங்கைப் பிரதமர் இரு இடங்களிலும் வெவ்வேறு விளக்கம் கூறினரா? பீக்கிங் மந்திரியின் கூற்று இலங்கைப் பிரதமரை மறைமுகமாகத் தாக்குவதேயாகும். இலங்கைப் பிரதமர் இதைத் தெளிவாக்கக் கடமைப்பட்டிருக்கின்ருர்.

கொழும்பு நாடுகளின் தலையீடு கூட இன்றி, இந்தியாவுடன் நேர்முகமாகப் பேசித் தகராறைத் தீர்த்துக் கொள்ள சீனம் ஆவல் கொண்டிருக்கிறதா? இந்திய அரசாங்கத்தையும் பிரதமர் நேருவையும் தினசரி ரேடியோ மூலம் திட்டிக் கொண்டும், இந்தியாவைப் பயமுறுத்திக் கொண்டும், இந்திய இராணுவ வீரர்களில் மூவாயிரம் பேருக்கு மேல் கைதுசெய்து வைத்துக் கொண்டும் இருக்கும்வரை, பீக்கிங்கின் மனச்சுத்தத்தை இந்தியா எப்படி நம்பமுடியும்? மேலும் ஏற்கெனவே பீக்கிங்கிலே பேச்சுகள் நடத்த இந்தியா தயாராக இருந்திருக்கையில் எல்லையில் சீனப்படைகளைக் குவித்து, திடீரெனத் தாக்கி, பலரைக் கொன்று குவித்த சீனத்துடன் எவ்வித நிபந்தனையுமின்றிப் பேச இந்தியா எப்படி மானத்துடன் சம்மதிக்க முன்வரமுடியும்?

சீனத்துக்கு உண்மையில் சமாதான ஆர்வம் இருப்பின், 1. கோடிக்கணக்கான இந்திய மக்களால் தெரிவு செய்யப்பட்ட டில்லி அரசாங்கத்தை எதிர்த்துச் செய்யும் தூற்றல் பிரசாரத்தை உடனே நிறுத்த வேண்டும். 2. தன்னிடம்வைத்துள்ள இந்தியக் கைதிகளை உடனடியாகத் திருப்பி அனுப்பிவிட வேண்டும். 3 கொழும்புநாடுகளின் உதவியையும் யோசனைகளையும் ஏற்க வேண்டும். 4. வீண் பூச்சாண்டிகளையும் எச்சரிக்கைகளையும்நிறுத்த வேண்டும் சமாதா[illegible]ல் தனக்குள்ள நல்லெண்ணத்தைக் காட்ட குறைந்தது இதையாவது சீனம் செய்ய வேண்டும். இன்றேல் சமாதானம்பற்றி சீனத்தின் அந்தரங்க சுத்தியை கொழும்பு நாடுகள் உள்ளிட்டு உலகமே சந்தேகிக்கும்படி அது தன்னை உட்படுத்திக் கொண்டதாகும்.

# மீன் பிடிக்கும் தொழில் வளர வங்கக் கடல் ஆராய்ச்சி

சர்வதேச இந்தியப் பெருங்கடல் ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ், அந்தமான் கடலிலும், வங்கக் குடாக்கடலிலும் விரிவான ஆராய்ச்சிகள் நடத்தப்படும். மீன்பிடித் தொழிலைப் பெருமளவு விருத்தி செய்யக் கூடிய அகண்ட பிரதேசங்கள் இந்தக் கடல்களில் எங்குள்ளன என்பது இந்த ஆராய்ச்சிகளின் விளைவாகக்கண்டு பிடிக்கப்படும்.

டாக்டர் யூஜின்லா என்ற புகழ்பெற்ற அமெரிக்கக் கடல் இயல் வல்லுனர் இக்கருத்தைத் தெரிவித்தார். மேலே கூறப்பட்ட சர்வதேச இந்தியப் பெருங்கடல் ஆராய்ச்சியின் யு. எஸ். உயிரின ஆராய்ச்சிப் பிரிவு மேற்கொள்ளவிருக்கும் முதலாவது கப்பல் பயணக் குழுவின் தலைவர் டாக்டர் யூஜின்.

தெற்கு ஆசியாவுக்குக் கடலிலிருந்து கிட்டும் உணவுகளைப் பெருக்கும் வாய்ப்புகளை ஆராய்வதுதான் இந்த முதற் பயணக்குழுவின் அக்கறை என்பதை இந்த அமெரிக்க வல்லுனர் சுட்டிக்காட்டினர்.

பெப்ரவரி மாதக் கடைசியிலோ அல்லது மார்ச்மாதத் துவக்கத்திலே இந்த முதல் பயணக்குழு பம்பாயை விட்டுப் புறப்படும். கடல்வாழ் உயிரினங்கள் ஆராய்ச்சி சம்பந்தமாக அமெரிக்கா வகுத்துள்ள திட்டத்தின்கீழ் மொத்தம் 9 பயணங்கள் நடத்தப்படும். அதில் இது முதலாவதாகும். ஒவ்வொரு பயணமும் இரண்டு அல்லது மூன்று மாதங்கள் பிடிக்கும். இந்தியப் பெருங்கடலில் ஒவ்வொரு பயணத்திற்கும் குறிப்பிட்ட ஒரு பிரதேசம் இருக்கும்.

உயிரினங்கள் மிக அதிகமாக இருக்கும் அதாவது உணவுக்கான மீன் மிக அதிகமாக இருக்கும், மீன் பிடிப்பை விருத்தி செய்யக்கூடிய 'பொங்கும்' இடங்கள் யாவை என்பதைக் கண்டுபிடிப்பதுதான் வரப்போகும் பயணத்தின் நோக்கங்களில் ஒன்று என்ருர் டாக்டர் லாபாண்டு.

கடலிலிருந்து கிட்டும் உணவை அதிகரிக்க இந்தப் பயணத்தின் விளைவாகக் கிட்டும் பலன்களைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

தாய்லாந்தின்மேற்குக்கரைக்கப்பால் கிழக்கு அந்தமான் கடலிலும் மேற்கு பர்மாக் கரைக்கப்பால் இன்னொரு பிரதேசத்திலும் இந்தப் பொங்கும் இடங்களைக் கண்டுபிடிக்க முடியும் என்று தாம் எதிர்பார்க்கிறதாக டாக்டர் லாபாண்டு கூறினர்.

வடகிழக்குப் பருவக்காற்று இடையறுமல் வீசுகிறது. கடலின் மேல்பரப்பு நீரை இக்காற்று அகற்றிவிடுகிறது. எனவே கீழே இருக்கும் நீர் மேலே பொங்கிவருகிறது. அத்துடன் மீன்களும் மேலே வருகின்றன. இவ்வாறு 'பாங்கும்' பிரதேசங்களில் கடலின் தாவர இனமும் செழிப்பாக இருக்கிறது.

இந்தத் தாவரங்கள்தான் கடல்வாழ் சிறு பிராணிகளுக்கு உணவாகிறது. இந்தப் பிராணிகள் மீன்களுக்கு உணவாகின்றன! இத்தகையப் பிரதேசங்கள் மீன்பிடிப்புக்குச் சாலச்சிறந்தது.

### உணவுப் பிரச்னை

இப்பொழுது மேற்கொள்ளப்படும் பயணத்தில், இத்தகைய சிறந்த மீன் பிடிப்புப் பிரதேசங்களை கண்டுபிடிக்க முடிந்தால் உணவுப் பிரச்னைகளைத் தீர்க்க அது பெரிதும் உதவக்கூடும். தெற்கு ஆசியாவில் உணவுப் பிரச்னை மிகக் கடுமையாக இருக்கிறது.

டாக்டர் லாபாண்டு யு எஸ். கடற்படையின் மின் அணு ஆய்வுக்கூடத்தின் கடல் சூழ்நிலைப் பிரிவின் தலைவர். இப்பொழுது ராஜாவில் இருக்கிருர். அவருக்கு வங்கக் கடல் புதிதல்ல. இந்தப் பிராந்தியங்களில் அவர் இந்தியக் கடற்படைக் கப்பல்களில் 47 தடவை சிறிய கடலாராய்ச்சிப் பயணங்கள் நடத்தியிருக்கிருர், ஆந்திரப் பல்கலைக்கழகத்தில் அவர் 2 ஆண்டுகள் இருந்திருக்கிருர். 1952-53, 1955-56-ம் ஆண்டுகளில் புல்பிரைட் திட்டங்களின் கீழ் கடல் இயல் பேராசிரியராக அவர் ஆந்திரப் பல்கலைக்கழகத்தில்பணியாற்றியுள்ளார்.

### விஞ்ஞான முயற்சி

திட்டமிட்டு நிறைவேற்றப்படும் இந்தக் கடல் ஆராய்ச்சிப் பயணங்களிலிருந்து கிட்டும் அதிகப்படி பலன்களை அவர் விளக்கிருர். இந்த மாபெரும் விஞ்ஞான முயற்சியின் ஒரு முக்கிய பலனாக இருக்கக்கூடியது இந்தப் பெருங் கடலில் ஆராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தும் ஆற்றலுடைய விஞ்ஞானிகள். நுட்ப நிபுணர்கள் ஆகியோர் கொண்ட ஒரு குழுவை ஏற்படுத்தியதாகும். இன்னொரு பயன் இந்தப் பிராந்தியத்தில் ஏற்கெனவே இருந்துவரும் நிலையங்கள், புதிய நிலையங்கள் ஆகியவற்றின் அபிவிருத்தியாகும். உயிரின பாகுபாட்டு நிலையமும் மாதிரிகள் சேகரிப்பும் இவற்றில் உட்படும்.

### சர்வதேச நிலையம்

சர்வதேச பிராணிகள் தாவரங்கள் பாகுபாட்டு நிலையம் ஒன்று கொச்சியில் அமைக்கப்படும் என்று டாக்டர் லாபாண்டு தெரிவித்தார். இந்த கடல் ஆராய்ச்சியில் பங்கு கொள்ளும் கப்பல்கள் அனைத்தும் சேகரிக்கும் மாதிரிகளை எல்லாம் இந்த நிலையம் இனவாரியாகப் பிரிக்கும் என்ருர்.

முதல் பயணத்தில் நான்கு இந்திய விஞ்ஞானிகள் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்ருர் டாக்டர் லா. பாண்டு. மூவர் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டனர். பம்பாய் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பஞ்சன் ராவ், ஆந்திரப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் வரதாச்சாரி, எர்ணுகுளத்தைச் சேர்ந்த டாக்டர் ஆர். வி. உன்னித்தான் ஆகியோரே இம்மூவர். டாக்டர் வரதாச்சாரி பௌதிக கடல் இயல் நிபுணராவார். டாக்டர் உன்னித்தான் எர்ணுகுளத்தில் இந்தியப்பெருங்கடல் உயிரின நிலயத்தில் இருக்கிருர் நாலாமவர் ஒரு இரசாயன நிபுணராக இருப்பார். தாய்லாந்திலிருந்து இரு விஞ்ஞானிகளும், பர்மாவிலிருந்து ஒருவரும் இக் குழுவில் இடம் பெறுகின்றனர். மற்றவர்கள் அமெரிக்க விஞ்ஞானிகள். ஆக மொத்தம் 30 விஞ்ஞானிகள் கொண்டது இக் குழு.

யு. எஸ். அன்டன் பிரன் என்ற கப்பல் தான் வரப்போகும் பயணத்தின் ஆராய்ச்சிக் கப்பல். இக்கப்பல் கடைசியாகப் பயன்பட்டது ஜனதிபதி ட்ரூமனுக்காகும். அது அவருடைய உல்லாசக் கப்பலாக இருந்தது பலப்பல மாறுதல்கள் செய்யப் பட்ட பிறகு தான் ஜனதிபதியின் உல்லாசக் கப்பல் ஆராய்ச்சிக் கப்பலாகியது. பலப்பல விருந்தினர் அறைகள் ஆய்வுக்கூடங்களாக மாற்றப்பட்டன. இப்பொழுது இக்கப்பலில் 30 விஞ்ஞானிகளும் 30 மாலுமிகளும் இருக்கின்றனர்.

டாக்டர் லா பாண்டுடன் அவர் மனைவியாரும் சேர்ந்து கொண்டிருக்கிருர். அவரும் ஒரு விஞ்ஞானியாவார். அன்டன பிரன் கப்பலின் விஞ்ஞானிகள் குழுவில் அவரும் ஒருவர். தற்சமயம் அவர் கொச்சி, திருவனந்தபுரம், மண்டபம், சென்னை, உட்பட தென் இந்தியாவில் இருக்கும் கடல்இயல் கடல் வாழ் உயிரின இயல் நிலையங்களுக்குச் சென்று வருகிருர்.

இந்தியப் பெருங்கடலையும் அக்கடலையொட்டிய வாயு மண்டலத்தையும் நன்ருகச் சிறந்த முறையில் அறியும் நோக்கம் கொண்டது இந்த சர்வதேச இந்தியப் பெருங்கடல் ஆராய்ச்சிப் பணி. கடலியல், இன்னும் அதன் தொடர்புள்ள மற்ற விஞ்ஞானங்கள் ஆகியவற்றின் பல வேறு துறைகளில் ஆராய்ச்சி நடக்கும்.

கடல் ஆராய்ச்சி பற்றிய விஞ்ஞானச் சங்கங்களின் சிறப்புக் குழுவின் சர்வதேசக் கவுன்சிலும் ஐ. நா. கல்வி, விஞ்ஞான பண்பாட்டு நிலையமும் சேர்ந்து இந்த ஆராய்ச்சியை நடத்துகிறது. 1960-64 ஆண்டுகள் முழுவதிலும் நடத்தக் திட்டமிட்டுள்ள இந்த ஆராய்ச்சியில் ஏற்கெனவே 10 பூர்வாங்கப் பயணங்கள் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

இந்தியப் பெருங்கடலிலும் அதைச் சுற்றியும் இருக்கும் நாடுகள் அனைத்தும் அவற்றின் கப்பல்களைக் கொண்டும், விஞ்ஞானிகளைக் கொண்டும் விரிவான ஆராய்ச்சி நடத்தும் இந்தியப் பெருங்கடலுக்கு வெளியே உள்ளே ஏழு நாடுகளும் இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளன. இந்த ஆராய்ச்சியில் பங்கெடுத்துக்கொள்ளும் முக்கிய நாடுகளாவன: ஆஸ்டிரேலியா; கிழக்கு ஆபிரிக்கா; பிரான்ஸ், ஜெர்மனி, இந்தியா, இந்தோனேஷியா, ஜப்பான், பாகிஸ்தான். போர்ச்சுகல், தென் ஆபிரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா அமெரிக்காதான் அதிகபட்ச கப்பல்களையும் 10 விஞ்ஞானிகளையும் தருகிறது. ஆக மொத்தம் சுமார் 25 நாடுகள் 44-க்கு அதிகமான கப்பல்களைக் கொண்டு இந்த சர்வதேச முயற்சியில் ஈடுபடுகின்றன. இவை 60 தனிப்பட்ட ஆராய்ச்சிப் பயணங்கள் நடத்தக்கூடும்.

### ஐயாறன் எழுதுவது

இந்தியாவை மீண்டும் சீனம் தாக்குமா? போர் மீண்டும் ஏற்படுமா? எந்தச் சமயத்திலும் சீனம் மீண்டும் இந்தியாவைத் தாக்கலாம் என்று எச்சரிக்கிருர் பிரதமர் நேரு.

ஏழ்மையும், சீனமும் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள இரு ஆபத்துக்களென்றும் இந்தச் சோதனை காலத்தில், இந்திய மக்கள் ஒற்றுமையுடன் இந்த ஆபத்துக்களை எதிர்க்கவேண்டுமென்றும், எல்லைப்புறத்தில் மட்டுமன்றி மற்ற இடங்களிலும் இந்தியா ஜயிக்கும் என்பதில் தனக்கு சந்தேகமில்லை என்றும் கூறுகிருர் பிரதமர் நேரு. சீனத்தின் "சமாதான பூச்சாண்டி"யில் அவருக்கு நம்பிக்கையில்லை.

*

இதே விஷயமாக சுவாமி ராமதாஸ் ஓர் அன்பருக்கு எழுதியுள்ள பதில் கடிதத்தில், "இந்திய - சீன எல்லையிலே இப்போது சண்டை நிறுத்தப்பட்டுள்ளதைப் பார்க்கிறோம். இனி போர் கடைபெறுதென்பதே ராமதாஸ் கருத்து. தெய்வத்தின் அருளால் நல்ல அறிவு ஏற்படும். பாரத நாடு ஒரு புண்ணிய பூமி. முன் காலை, இக்கால ஞானிகளும் முனிவர்களும் இந்தியா மீது வெல்ல முடியாத அருள்சக்தியைப் பொழிந்திருக்கின்றனர். இந்தியா பத்திரமாக இருக்கவும் எந்த விரோதியிடமிருந்தும் எவ்வித தீங்கும் ஏற்படாமல் இந்தியாவைக் காப்பாற்றவும் அவர்கள் பார்த்துக்கொள்வர், சமாதானமே நமது லட்சியம். அதை நாம் அடைந்தே தீருவோம்" என்று குறிப்பிடுகிருர். பெரியோர் வாக்கு பொய்க்குமா?

* * *

மூன்ருவதுஉலகயுத்தம்ஏற்படாதெனறே தாங்கள் இன்னும் கருதுகிறீர்களா? என்று மற்றொரு கேள்விக்கு சுவாமி கூறியதாவது:-

அது வெறும் கருத்தல்ல. மூன்ரும் யுத்தம் ஏற்படாதென்று அறிவிக்க தெய்வமே ராமதாஸைத் தூண்டினர். ஆதலாலே ராமதாஸின் வார்த்தை நிறைவேறும்படி பார்த்துக்கொள்ள வேண்டியது கடவுளின் பொறுப்பு. பொறுத்துப் பாருங்கள். இது உண்மையா, அல்லவா என்பதை இதற்குள் தீர்மானிக்க முடியாது"

கே: இதைக்கேட்க எங்களுக்கு மிக ஆறுதலாகவுள்ளது. ஆனால் இதை சந்தேகிப்பவர், பயந்துகொண்டே இருப்பர்.

ப:- யாராவது பொறுப்பாயின் அது கடவுள்தான். ராமதாஸ் கூறியது நிறைவேறுமா நிறைவேருதா என்ற கவலையும் ராமதாஸுக்கு இல்லை. பகதன் என்ற முறையில் ராமதாஸ் கூறியதை நிறைவேற்ற வேண்டியது கடவுளின் பொறுப்பு. உலகமனைத்தின் நன்மைக்காக பக்தன் கூறுவதை நிறைவேற்ற வேண்டியது கடவுளின் கடமை என்றுகருத்துப்பட ஒருமரத்திசுலோகமுண்டு. சத்யசங்கல்பமென்று அதற்குப் பெயர்

சூயஸ் தகராறு ஏற்பட்டபோது அதுபெரிய யுத்தமாகக் கிளம்பும் ஆபத்து இருந்தது. உச்சி மகாநாடு முறிந்தபோதும். அப்படியே அடுத்தபடி பெர்லின் பிரச்னை. பத்திரிகை மூலமும்ரேடியோ வாயிலாகவும் உலக நிலைமையை அவதானித்து உலகம்போகிற போ[illegible]

(8 பக்கம் பார்க்க)

# “கைத்தொழில்கள்தான் இனி வாழ்வளிக்கும்”

## பரிசளிப்பு விழாவில் கல்லூரி அதிபர் கருத்து

யாழ்ப்பாணம், திங்கள்

“எமது பிரதான தொழிலாக விவசாயம் இருப்பினும் தென்னிலங்கை விவசாயிகளுடன் நம்மை ஒப்பிடும்போது நாம் பல வசதியீனங்களை உடையவர்களாகவே இருக்கின்றோம். அவர்களுக்கு இயற்கை வளமும் அரசாங்க சலுகைகளும் உண்டு. இச் சூழ்நிலையில் நாம் கைத்தொழிலுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். கைத்தொழிலால் மிகவிரைவில் முன்னேறிய நாடுகளான ஜப்பான், சுவிட்சர்லாந்து, இஸ்ரேல், ஒல்லாந்து ஆகிய நாடுகள் நமக்கு முன்மாதிரியாக உள்ளன” என்று ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் வண. பிதா ஜே. ஸ்ரனிஸ்லோஸ் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் தமது அறிக்கையைச் சமர்ப்பித்துப் பேசுகையில் கூறினர்.

சனிக்கிழமையிரவு திரு. ஏ. ஆர். நிக்கலஸ் தலைமையில் விழா நடைபெற்றது. திருமதி நிக்கலஸ் பரிசு வழங்கினர்.

கல்லூரி அதிபர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

### சிறுபான்மையினரும் கல்வியும்

சிறுபான்மையினராகிய நாம் சிக்கல் நிறைந்த ஒரு சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். சூழ்நிலைக்கு ஏற்ப எங்களை நாங்கள் ஆக்கிக் கொள்ளவில்லை. இக் குறைபாடு எம்மிடையே அதிகம் காணப்படுகின்றது. வேலையில்லாத் திண்டாட்டத்தோடு தொடர்புள்ள பாதுகாப்புணர்வின்மை, மனிதப்பண்புகளின் மறைவு ஆகியவை காரணமாக நாம் இன்று மனமுடைந்த ஒரு கூட்டமாய் வாழ்கின்றோம். நாடு சுதந்திரம் அடைவதன் முன், அரசாங்க, வணிகத்துறைகளில் வேலைபெறும் சந்தர்ப்பம் அனைத்தும் எங்கட்கு வாய்ப்பாகவே இருந்தன. எங்கள் இயல்பான திறமை, கடின உழைப்பு விடாமுயற்சி என்பன அத்துறைகளில் எங்கட்கு வெற்றியையும் மதிப்பையும் அளித்தன. எல்லா அரசாங்க இலாகாக்களிலும் எமது ஜனத்தொகை விகிதாசாரத்துக்கு அதிகமாகவே நாம் கேந்திர ஸ்தானங்களில் அமர்ந்திருந்தோம். இந்நிலை பெரும்பான்மைச் சமூகத்தினரின் கண்களை விழிக்கச் செய்தது. அவர்கள் இவ்வுண்மைகளை எடுத்துக்காட்டிச் சிறுபான்மையினருக்கு எதிராகப் பிரசாரஞ் செய்யத்தொடங்கினர். ஈற்றில் “சர்வ சிங்கள” சட்டம் உருவாக்கப்பட்டது. அதுகாரணமாக நாங்கள் பின்னணியில் தள்ளப்பட்டோம். இவ்வித அவலநிலை சி. பா. ப. ப. தரம் முதல் பட்டதாரிகள் வரை கல்வி கற்றுத் தேறினோர் தொகைமிக்குள்ள இக்காலத்தில் தோன்றியுள்ளது. கல்விக்கடலைக்கடந்தும் கவலை தீராத அவர்களிடையே பாதுகாப்பின்மை உணர்ச்சியும், ஏமாற்றமும் தலைதூக்கி நிற்கின்றன. இலங்கையில் கல்வி கற்றோர் தொகை அளவு கடந்து விட்டது என்று கருதுதல் தவறு. கற்றோர் தொகை குறைவு ஆனால் அத்தொகையினருக்கே அளிக்கக் கூடிய போதிய உத்தியோகம் இங்கில்லை. சர்வகலாசாலைப் பிரவேசமும் விகிதாசாரப்படியே நடைபெறுங்காலமுஞ் சமீபித்துவிட்டது. தகுதிவாய்ந்த மாணவர் இந்நாட்டில் மாத்திரமன்றி வெளிநாடு சென்று உயர்தரக்கல்வி கற்கும் உரிமையும் மறுக்கப்படுகின்றது.

இவ்வுண்மைகளை யாழ்ப்பாணத்தவன் ஓர்ந்து உணராமல், இன்னும் “காற்சட்டை உத்தியோகம்” தேடுதலிலேயே கண்ணுக இருக்கின்றான். சொற்ப சம்பளம் கிடைத்தாலும் உடம்புக்குக் கஷ்டம் வருவியாத அரசாங்க உத்தியோகம் தங்கள் பிள்ளைகளுக்குக் கிடைக்கவேண்டும் என்ற எண்ணமே இன்னும் பெற்றோரின் மனதில் குடிகொண்டிருக்கின்றது. வேறு உத்தியோகங்களிலும் பார்க்க அரசாங்க உத்தியோகத்திலேயே போதிய பாதுகாப்பு உண்டு என்று அவர்கள் உணர்கின்றனர். உத்தியோகம் கிடைத்தற்கரிய பொக்கிஷம் என்ற மனப்பான்மை, எங்கள் பெற்றோரின் மனதில் குடிகொண்டு வந்திருக்கிறது. அரசாங்க உத்தியோகம் பெற்ற ஆடவனுக்கே “கல்யாணச் சந்தை”யில் நல்ல பெறுமதியுண்டு என்ற எண்ணம் அவர்கள் மனதில் வலுப்பெற்றுவிட்டது. இக்கருத்து முதியோரிடையில் மட்டுமின்றி இளைஞரிடையிலும் அழியா வரம்பெற்று வேரூன்றி நிற்கின்றது. இதன் பயனாக எங்கள் இளைஞர்கள் பொருளாதார முன்னேற்றப் பாதையிலோ அன்றி வேறு பயன் தரும் வழிகளிலோ செல்லாது. “இலவு காத்த கிளி” போல் அரசாங்க உத்தியோகமே பெரிதென நினைக்கின்றனர். இந்நிலை ஈற்றில் அவர்களை ஏமாற்றத்திலேயே கொண்டு போய் விடும். இங்கு நான் வலியுறுத்தும் விஷயம் புதியதொன்றன்று; ஒரு கத்தோலிக்க உண்மையே “மனித சமுதாயத்தின் பொதுவான முன்னேற்றத்துக்கா, ஒருவன் காலம், இடம், சூழ்நிலை ஆகியவற்றிக்குத் தக்கதாகத் தன்னை இயையச் செய்வதும், காலப் போக்குக்கு ஏற்ப உண்மையான தேவைகளை அறிந்து அவற்றை நிவிர்த்தி செய்தற்கான வழிவகைகளை வகுத்தலுமே கல்வியின் பயன்” என பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசர் கூறியுள்ளார். நாம் வாழும் சமுதாயச் சூழ்நிலையில் தோன்றியுள்ள மாற்றங்களே இப்புதிய தேவைகளைத் தோற்றியுள்ளன. “பழையனவற்றில் குருட்டு நம்பிக்கை வைப்பது உங்கள் செயல்புரியும் திறமைக்குத் தடையாகும்” எனப் பாப்பரசர் வலியுறுத்தியுள்ளார். எனவே நாம் தேவையானபோது பழமையினின்றும் விலகி உளம் சிதறுது இருத்தற்குப் புதிய வழிவகைகளைக் கையாளவேண்டும்.

ஆண்டுதோறும் பத்துசதவித மாணவர் சி. பா. த. ப. பரீட்சைக்குத் தோற்றுகின்றனர். இதில் இரண்டு வீதத்தினர்கூடப் பல்கலைக் கழகத்திற் புகவோ அல்லது கற்கவோ தகுதியுடையவராகத் தோன்றவில்லை மீதி 8 வீதத்தினர்–பரீட்சையில் தேறியவரும் சரி தேருதோரும் சரி–உத்தியோக வேட்டையில் இறங்குகின்றனர். தொழில்நுட்பக் கல்வியில் ஆர்வமுடையோர் ஏதாவது ஒரு தொழிலில் பயிற்சி பெறலாம். உங்களிற் பெரும்பான்மையோரை, கவர்ச்சிமிக்க, அதிக ஊதியம் தரக்கூடிய சிறந்த தொழில்கள் கூவி அழைக்கின்றன. அவ்வித சிறந்த தொழில்களுள் ஒன்று விவசாயம் யாழ்ப்பாண மக்களுட் பெரும்பாலோர் விவசாயிகளே. ஆனால் அவர்கள் கமத்தொழிலில் நவீன முறைகளைப் பராமுகஞ் செய்கின்றனர். விசாலமான முறையில் விவசாயம் செய்வதோடமையாது சொற்ப நிலப் பரப்பில் பல தொழில்முறைகளைப் பின்பற்றவேண்டும். நமது சக்தியின் சுவாத்திய நிலை பின் கூறப்பட்டதற்கு ஏற்ற வகையில் அமையாதிருக்கலாம். ஆனால் கமத்தொழில் ஈடுபடாத காலங்களில் குடிசைக் கைத்தொழில், விவசாயத்தோடு தொடர்புடைய வேறு தொழில்கள் ஆகியவற்றில் ஈடுபட்டு இக்குறையை நிவர்த்திக்கலாம்.

### மீன்பிடித் தொழில்

அகன்ற சமுத்திரம் கடவுள் அளித்த கொடையாக விளங்கும் இடங்களில் மீன்பிடித் தொழில் பெருமளவு லாபத்தைத் தருகிறது. மீன் பெருமளவில் கிடைக்கும் பேதுரு பரவை கடற்பரப்பு நமக்கு வெகுதூரத்திலில்லை. இளைஞர் பழைய அர்த்தமற்ற நம்பிக்கைகளை உதறித்தள்ளிவிட்டு புதிய தொழில் துறைகளில் ஈடுபடவேண்டும், அவர்கள் ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் அதிக பலனைபெறலாம். அரசாங்க உதவியுடன் அல்லது ஸ்தாபன அடிப்படையில் முதலீடு செய்து மீன்பிடித் தொழிலுடன் தொடர்புடைய வள்ளம செய்யும் தொழில், கூட்டுறவு முறையில் மீன் பதனிடும் தொழில் முதலியவற்றில் ஈடுபட்டுப் பெரும் பயனடையலாம். எங்கோ இருப்பவர்கள் எமது கடல்களிலிருந்து பெரும் செல்வந்தேட நம்மவர் பார்த்துக்கொண்டு வாளாவிருக்கின்றனர். மீன்பிடித்தலின் முக்கியத்துவத்தை இன்னும் எமது மாணவர் உணரவில்லை. இதுவே இந்நிலைக்குக் காரணம்.

கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

---

## ‘இந்தியர்களை விரட்டக்கூடாது’

—சர். நிக்கிலஸ்

கொழும்பு, ஞாயிறு

‘இலங்கையிலுள்ள இந்தியரை உடனடியாக விரட்டிவிடவேண்டும்’ என்று கூறுவது சரியானதல்ல என்று இலங்கை பல்கலைக் கழக உப அத்தியட்சகர் சர். நிக்கலஸ் அட்டிகலை கண்டிக்கருகில் ஒருகூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

‘இந்தியர்கள் பல்லாண்டுகளாக இந்நாட்டில் வாழ்ந்து வந்தவர்கள் என்பதனை ஒப்புக்கொள்ளவேண்டும்’ என்று வற்புறுத்தி இந்தியர் பிரச்னை கவனமாகப் பரிசீலனை செய்ய வேண்டிய ஒருபிரச்னை என்றும் அவர் அறிவுறுத்தினர்.

# ‘ஜினதாசா கமிட்டி அறிக்கையை நிராகரிக்கவும்’

## அரசாங்க லிகிதர் சேவை யூனியன் கோரிக்கை

கொழும்பு, ஞாயிறு

ஒருமுகப்பட்ட நிர்வாக சேவையை அமைப்பது சம்பந்தமாக, ஜினதாசா கமிட்டி தயாரித்த அறிக்கையை முற்றாக நிராகரிக்கும்படி அரசாங்க லிகிதர் சேவை யூனியன், அரசாங்கத்தைக் கேட்டுள்ளது.

ஜினதாசா கமிட்டி அறிக்கையை நிராகரிக்கும்படி அரசாங்க லிகிதர்சேவை யூனியன் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, மற்றும் மந்திரிகள் எல்லோருக்கும் அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் கேட்டுள்ளது.

இதுசம்பந்தமாகத் தங்களது கருத்துக்களைத் தெரிவிக்கும் பொருட்டு, பேட்டியொன்றுக்கு ஒழுங்கு செய்யும்படி, அரசாங்க லிகிதர் சேவை யூனியனின் காரியதரிசி திரு. ஐ. ஜே. விக்கிரமா பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைக் கேட்டுள்ளார்.

அரசாங்க லிகிதர் சேவை யூனியன் தனது மகஜரில் தெரிவித்திருப்பதாவது:-

‘மக்களுக்கு நல்ல சேவையை அளிப்பதற்கு, ஒருமுகப்பட்ட நிர்வாக சேவை மிகவும் அவசியமாகும் ஒருமுகப்பட்ட தொழில் நுட்ப சேவையும் அவசியமாகும் கச்சேரி முறை ஒழிக்கப்படவேண்டும். சுதந்திரமான ஒரு நாட்டுக்கு கச்சேரி முறை அவசியமானதல்ல. ஒருமுகப்படுத்தப்பட்ட நிர்வாக சேவைகளுடன் ஒருமுகப்படுத்தப்பட்ட தொழில் சேவையும் இயங்கவேண்டும். ஐந்தாவது வகுப்பிலுள்ள கிரேட்டுகள் யாவும் ஒழிக்கப்படவேண்டும்-”

# ‘நாட்டில் அமைதி நிலவ கிராமசேவையாளர் கடமை’

யாழ்ப்பாணம், திங்கள்

“பழைய காலன் ஆதிக்கத்தின் ஓர் சின்னமாக இருந்த கிராமத் தலைமைக்காரர்கள் முறை நீங்கிவிட்டது. நீண்டகாலமாகவே இருந்துவந்த ஓர் முறை இதுவாகும் அரசாங்க ஊழியர்கள் அனைவரும் சேவையாளர்களாகவே கருதப்படவேண்டும்” என்று அரசாங்க அதிபர் திரு. வி. பி. வித்தாச்சி கிராம சேவகர்களின் வாசஸ்தல பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் கூறினர்.

சனிக்கிழமை யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. கட்டிடத்தில் இப் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

வடமாகாண அரசாங்க அதிபர் திரு. வி. பி. வித்தாச்சி மேலும் பேசுகையில் கூறியதாவது:

இதுவரைகாலமும் நமது நாட்டுக்குச் சேவைசெய்து வந்துள்ள கிராமத் தலைமைக்காரர்களின் சேவையை நாம் பாராட்டவேண்டும். நன்றி தெரிவிக்க வேண்டிய கடமையும் உண்டு. கிராமசேவகர்களே முதன்முதலாக அரசாங்க சேவையாளர் என்ற முறையில் அழைக்கப்படுகிருர்கள். அவர்கள் நமது நாட்டு மக்களுக்குச் சேவைசெய்யவேண்டியவர்கள்.

யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் சூப்பிரண்டன்ட் திரு ஏ. எஸ். மரியநாயகம் பேசுகையில் கூறியதாவது:

எந்த ஒரு பகுதியில் பொலிஸ் நிலையம் இல்லாமலுள்ளதோ அப் பகுதியே சிறந்தது. இப்போது நாட்டில் சிறு சிறு குற்றங்கள் மலிந்துகொண்டுவருகின்றன. இதனைப் போக்க கிராமசேவகர்கள் உழைக்க வேண்டும். சிறு சிறு குற்றங்களை கிராமத்தலைமைக்காரர்களுடன் கலந்து விசாரிக்க எமது பகுதியில் உள்ள சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்துள்ளேன். நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவ கிராமசேவகர்கள் பொலிசாருடன் ஒத்துழைக்கவேண்டும்.

கிராமசேவகர்களின் பயிற்சி வகுப்புப் பொறுப்பாளரும் மாவட்டக் காரியாதிகாரியுமான திரு. எம். சபாரத்தினமும் மற்றும் பலரும் பேசினா.

கிராமசேவகர்களின் பயிற்சி வகுப்பு கடந்த மாதம் 2-ம் திகதி ஆரம்பமாகி கச்சேரியின் பல்வேறு பிரிவுகளிலும் இம்மாதம் 15-ம் திகதிவரை நடைபெற்றது. யாழ்ப்பாணத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள கிராம சேவகர்கள், ‘ஏ’ ‘பி’ என இரண்டாகப் பிரிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றனர்.

‘ஏ’ பிரிவில் உள்ளவர்களுக்கு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும், ‘பி’ பிரிவில் உள்ளவர்களுக்கு வை. எம். சி. ஏ. கட்டிடத்திலும் இம்மாதம் 19-ம் திகதியிலிருந்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது.

கிராம சேவையாளர்கள் தமது பயிற்சி முடிவடைந்ததும் தொழிற்சங்க மொன்றினை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்து வருகின்றனரெனத் தெரிகிறது.

# “கலப்புமணம் செய்தோருக்கு உத்தியோக சலுகை இல்லை”

—சென்னை நிதியமைச்சர்

சென்னை, மார்ச் 17

காதல் திருமணம், சுயமரியாதைத் திருமணம், ஜாதித் திருமணம் ஆகிய எல்லாவற்றையும் தாம் வரவேற்பதாக சென்னை ராஜ்ய நிதியமைச்சர் சட்டசபையில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

1960-61ல் செங்கல்பட்டு ஜில்லாவில் பதிவு செய்யப்பட்ட கலப்பு திருமணத் விபரங்கள் தமக்குக் கிடைக்கவில்லை என்று நிதிமந்திரி ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

கலப்பு மணம் செய்துகொண்டவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு கல்விச் சலுகைகள் போன்றவை அவசியமில்லை. ஏனெனில் அந்தக் குழந்தைகள் சாதாரணமாகச் சூடிகையாக இருக்கும். கலப்புத் திருமணம் செய்து கொண்டவர்களுக்கு உத்தியோக விஷயத்தில் சலுகை காட்டும் உத்தேசம் இல்லை. இதனைப்பற்றி முன்பு யோசிக்கப்பட்டது. ஆனால் அவ்வாறு செய்வது ஒரு பிரிவினருக்குச் சாதகமாகப் பாகுபாடு காட்டுவதாகுமாகையால் அந்த யோசனை கைவிடப்பட்டது என்று மந்திரி கூறினர்.

கலப்பு மணங்களை ஊக்குவிப்பதற்கு அரசாங்கத்திடம் எந்தத் திட்டமுமில்லை. ஆனால் அங்கத்தவர்கள் ஏதாவது யோசனை கூறினால் அதனை வரவேற்பதாக மந்திரி மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர்.

தனியார்துறையில் ஆசிரியர் பயிற்சிப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படுவதனை அரசாங்கம் விரும்பவில்லை என்று மந்திரி மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் கூறினர். தனியார் துறைப் பாடசாலைகளில் லஞ்சம் மலிந்திருக்கிறதென்பதனை மந்திரி நிராகரித்தார்.

கள்ளக்கடத்தலைத் தடுக்க வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று விவசாய இலாகா மந்திரி திரு. கக்கன் கூறினர்.

இன்ஜினியரிங் கல்லூரிகளில் பெண்களுக்காக ஸ்தானங்களை ஒதுக்கும் உத்தேசம் கிடையாது என்று கைத்தொழில் மந்திரி திரு. வெங்கடராமன் கூறினர். கிண்டி இன்ஜினியரிங் கல்லூரியில் ஒரு பெண் மட்டும் படிப்பதாகவும், பெண்கள் சாதாரணமாக இப்படிப்புக்கு முன்வருவதில்லை என்றும் அவர் கூறினர்.

சென்னை ராஜ்யத்தில் 15 பெண்கள் இன்ஜினியரிங் பட்டம் பெற்றிருப்பதாகவும் பெண்களுக்கான பாலி டெக்னிக்குகளுக்கு நல்லாதரவு இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

## நாய் கடித்து மரணம்

பையாகலை, ஞாயிறு

கலமுல்லை என்ற இடத்தைச் சேர்ந்த ஐந்து வயதுள்ள டபிள்யு. ப. ஜே. ஏ. பிடலிஸ் பெரேரா விசர் நாய்க்கடி காரணமாக மரணமானர். சிறுவனை மூன்று வாரங்களுக்கு முன்னர் விசர் நாய் ஒன்று கடித்தது.

# 'கால்மணி நேரம் மேயராக இருக்க விடுங்கள்'

## யாழ்ப்பாண மாநகரசபைக் கூட்டத்தில் சுவையானசம்பவங்கள்

யாழ்ப்பாணம், வெள்ளி
யாழ்ப்பாணம் மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத் தொடர்ச்சி கடந்த வெள்ளிக்கிழமை மாலை நடைபெற்றதல்லவா? அக்கூட்டத்தில் எமக்குக் கிடைத்த சுவையான செய்திகளை வரிசெலுத்துவோராகிய வாசகர்களும் சுவைக்கத் தருகிறோம்.

### வேலிக்குப் பின்னால் கட்டடங்கள்

"யாழ்ப்பாணம்பெரியகடைக்குள் மாநகரசபையின் உத்தரவின்றி கிடுகுவேலி மறைவில் சில கட்டடங்கள் எழும்புகின்றன. இவர்கள் கறுப்புக்கொடி கட்டியவர்கள் என்பதனால் நடவடிக்கை ஒன்றும் எடுக்காமல் மேயர் விட்டுவிட்டாரா?" என்றும் 'நடவடிக்கை எடுக்கக் கஷ்டமாக இருக்குமேயானால் 15 நிமிட நேரம் என்னை மேயராக இருக்க விடுங்கள். அதற்குள் நான் நடவடிக்கை எடுக்கிறேன்' என்றும் உதவி மேயர் திரு. ஆ. துரைராஜசிங்கம் மேயர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கத்தைக் கேட்டார். மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்திலே இச்சம்பவம் நடைபெற்றது. உதவி மேயர் சபையில் இருந்த ஏனைய உறுப்பினர்களின் சிரிப்புக்கிடையே இவ்வினாவைக் கேட்டார்.

### இரவில் ஆஸ்பத்திரியில் நாய்கள் கவனம்

யாழ்ப்பாணத்தில் விசர்நாய்கள் நடமாடுவதன் அதிகரிப்பைக் குறைப்பதுபற்றி அங்கத்தவர்கள் ஆராயும்போது, நாய் வாலின் ஒரு துண்டைக் காட்டினால் மாநகரசபை ஒரு ரூபா கொடுக்கக் கூடியதாக இருக்கும். ஆனால் பிடிக்கும் நாய்களை சொந்தக்காரரின் விருப்பத்திற்கு நாய்பிடிகாரர் விடுதலை செய்யின் அவர்களுக்கு 2 ரூபாய் கிடைக்கக் கூடிய லாபகரமான வியாபாரமாக இது இருக்கும்போது விசர்நாய்களைக் குறைக்க மாநகரசபையினால் முடியுமா என்றும் திரு. ஆ. துரைராஜசிங்கம் கேட்டார்.

நாய்பிடிவேலை பகலிலல்ல இரவில்தான் நடைபெறவேண்டும் என்றும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் இரவில் நடமாடும் நாய்கள் அதிகமென்றும் திரு. டி. எஸ். துரைராஜா கூறினர்.

### பட்டமரமும் நஷ்டம் கோருகிறது

பட்ட மரமுறிவினால் யாழ்ப்பாண மாநகரசபையிடம் 20 ஆயிரம் ரூபாய் நஷ்டம் கோரியது கல்வியங்காட்டு சந்தை மருதமரம் மட்டுமல்ல, சென்ற இருவாரங்களுள் சென். பட்ரிக்ஸ் கல்லூரிக்கருகாமையில் இருந்து மற்றொரு பட்டமரமும் கோர்ட்டார் தீர்ப்புப்படி மாநகரசபைக்கு 7 ஆயிரம் நஷ்டத்தைக் கோரியுள்ளது. இந்த ரகசியத்தையும் மேயர், மாநகரசபையின் மாதாந்தக் கூட்டத்தில் திரு. ஏ. ஜி. ராஜசூரியரின் கேள்விக்குப் பதிலளிக்கையில் வெளியிட்டார்.

இதைவிட மாநகரசபையிடம் மேலும் நஷ்டம் கோரக்கூடிய இன்னுமொரு பட்ட மருதமரம் தமது பகுதியிலும் உண்டு என்று திரு. சோ. இராசரத்தினம் மேயருக்கு எச்சரிக்கை செய்தார்.

மாநகரசபைக் கூட்டத்தில் ஜே. பி. பட்டம் அரசாங்கத்தினால் கொடுக்கப்படுவது சேவை நலனுக்காகவா கௌரவத்திற்காகவா அல்லது பணத்திற்காகவா என்ற பிரச்னையும் எழுந்தது. கௌரவத்தையும் பணத்தையும்குறிபிடுபவரே பலராக இருந்தனர்.

### செய்தித் தணிக்கையா?

ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சிசட்ட மூலம் பத்திரிகைத் தணிக்கை செய்வதானால் நாமும் விரும்புவதை பத்திரிகையில் வெளிவருவதனை ஏன் தடைசெய்யக்கூடாது என்ற ஒரு சட்டத்தை மாநகரசபைக் கூட்டத்தில் காணக் கூடியதாக இருந்தது.

பத்திரிகைத் தணிக்கை மூலம்பிரச்னைகளைத்தீர்க்க முடியுமா? 'எமது' ஜனநாயகம் எங்கே? என்ற கேள்விகளும் எழுந்தன.

மாநகரசபை எவ்வித தணிக்கை கொண்டுவரினும் நீண்ட நேர தேவையற்ற விவாதங்களையும் ஒரேவிஷயத்தைத் திரும்பத் திரும்ப ஒருவர் பேசுவதனையும் தணிக்கை செய்யும் அவசியத்தை கமிஷனர் உணர்ந்திருந்தபடியால் தேநீர்ச் சிற்றுண்டிச் செலவு அவர் மூலமில்லாமல் தயாளசிந்தையுள்ள மேயர் மூலம் நடைபெறுகிறது.

## வள்ளுவர் விழா

மாவிட்டபுரம், ஞாயிறு
"வித்துக்களிற் சிறிய ஆலம் வித்து மரங்களிற் பெரியதும் நிலைபேறுடையதுமாகிய ஆலமரமாகியதுபோல பாக்களிற் சிறிய குறட்பாவாலாய திருக்குறளும் நூல்களிற் தலையாயதும் நிலைபேறுடையதுமான பெருநூலாக விளங்குகின்றது. திருக்குறள் எழுந்த காலத்தும் அதன் பின்னரும் தமிழ் நாட்டிற் தோன்றிய மகாகவிகளும் கவிச் சக்சரவர்த்திகளும் கூட அந்தப் பேராலமரத்தின் நிழலில் ஒதுங்கித் தம் அறிவைப் பக்குவப்படுத்தியவர்களே."

யூனியன் கல்லூரி சிரேஷ்ட மாணவர் மன்றம் நடத்திய வள்ளுவர் விழாவில், பண்டிதர் செ. நடராஜன் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர். திரு ஆ. தனபாலசுந்தரம் தலைமைவகித்தார். புலவர் ம. பார்வதிநாதசிவம் கூறியதாவது:-

பக்தனொருவனுக்கு கடவுள் குணங்கள் வந்தமைவதுபோல திருவள்ளுவர் விழாவைக் கொண்டாடும் நமக்கும் அவர்தம் பண்புகள் தாமாகவே வந்தமையவேண்டும். அப்போதுதான் நாம் உண்மையான வள்ளுவர் விழாவைக் கொண்டாடியவர்களாவோம்.

திரு. இ. அம்பிகைபாகனும் பேசினர்.

## நேரு இல்லம் வெற்றி

மாவிட்டபுரம், ஞாயிறு
காங்கேசன்துறைகுரு விளையாட்டுக் கழகத்தின் நேரு இல்லத்திற்கும் காந்தி இல்லத்திற்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் நேரு இல்லம் வெற்றியீட்டியது.

நேரு இல்லம் 15-12, 15-14 புள்ளிகளால் காந்தி இல்லத்தைத் தோற்கடித்தது.

திரு. பி.சின்னத்துரை மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## சாப்பாடு கிடையாது

கல்முனை, ஞாயிறு
கல்முனை வாடி வீட்டில் இரவு ஒன்பது மணிக்குப் பின்னர் சாப்பாடோ அல்லது குடிவகைகளோ பெறமுடியாது. இலங்கையில் இந்த வாடி வீட்டில் தான் இப்படியான நிலை இருப்பதாகக் கூறப்படுகிறது

## செய்தித் திரட்டு

### புதிய நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, ஞாயிறு
வேலணை வாலிபர் முன்னேற்றச்சங்கத்தின் கொழும்புக் கிளைக்கூட்டம் அண்மையில் திரு. செ. பொன்னுச்சாமி தலைமையில் நடைபெற்றபோது பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்:- போஷகர்கள்: திரு. வே. அ. கந்தையா எம். பி, பண்டிதர் க. பொ. இரத்தினம், தலைவர்: திரு. ஏ. அமிர்தலிங்கம், உப-தலைவர்: திரு. பொ. விநாயகமூர்த்தி, செயலாளர்: திரு. பொ. தியாகராசன், உப- செயலாளர்: திரு. மா. வில்வலிங்கம், தனாதிகாரி. திரு. செ. நாகராசா, கணக்குப் பரிசோதகர்: திரு. செ. கந்தசாமி. நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

### மாற்று அரிசி

ஊர்காவற்றுறை, ஞாயிறு
வேலணைத்தீவில் உள்ள கிராமங்களில் தற்போது பச்சையரிசிக்குப் பதில் 'மில்சாட்' அரிசி பங்கீட்டுக்கு வழங்கப்பட்டுவருகிறது. ஊர்காவற்றுறைப் பட்டின சபை எல்லைக்குள்ளும் இவ்வித அரிசி வழங்கப்படவுள்ளது. ஊர்காவற்றுறைப்பட்டின சபை அரிசி விநியோகத்தை மாற்றியமைக்கும் படி அரசினரைக் கேட்டிருந்தது.

### கூட்டுப் பிரார்த்தனை

சண்டிருப்பாய், ஞாயிறு
பிரசித்திபெற்ற சண்டிருப்பாய் கல்வளைப் பிள்ளையார் கோவிலிலே கூட்டுப்பிரார்த்தனை ஒழுங்கு செய்யப்பெற்று, வாராவாரம் வெள்ளிக்கிழமை தோறும் இடம் பெறுகின்றது.

### தண்ணீர் தட்டுப்பாடு

கண்டி, ஞாயிறு
கடும்வரட்சிகாரணமாக கண்டியில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. தண்ணீர் தட்டுப்பாட்டு விநியோகம் இம்மாதம் 20 திகதி முதல் அமுலுக்கு வரும். கண்டி குளத்து நீரை உபயோகிப்பவர்கள் அத்தண்ணீரைச் சோதிக்க வைத்த பின்னர் உபயோகிக்கும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

### நோயாளர் அருந்தும் நீரில் பூச்சி,புளு!

எட்டியாந்தோட்டை, ஞாயிறு
கிட்டுல்கல ஆஸ்பத்திரியைச் சேர்ந்த நோயாளர்கள் அருந்தும் நீர், அசுத்மாகவிருக்கிறது. தண்ணீர்க் குழாயில் சில வேளைகளில் 'கறள்களும்' வருகின்றன. சில வேளைகளில் நோயாளர் அருந்தும் நீரில் பூச்சி புளுக்களும் இருக்கின்றன!

### விவசாயக் கண்காட்சி

கம்புறுபிட்டியா, ஞாயிறு
தல்பவில மகாவித்தியாலயத்தில் இம் மாதம் 24-ம் திகதி விவசாயக் கண்காட்சியொன்று நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. மகாநாம சமரவீரா இதில் முக்கிய விருந்தினராகக் கலந்து கொள்வார்.

### இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
ஆனையிறவு 'உப்பளப்பகுதி சுப்பிரிண்டன் திரு. எஸ். கனகநாயகம், செம்மணி இருபாலை உப்பளத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். செம்மணி இருபாலை உப்பளத்தில் பல அபிவிருத்தி வேலைகள் நடைபெறும் எனத் தெரிய வருகிறது. உதவி சுப்பிரிண்டன திரு. ஆர். ஆர். எஸ். நல்லையா ஆனையிறவு உப்பளப்பகுதிசுப்பிரிண்டனக பதவியேற்பார்.

# மே மாதம் மகாநாடு நடத்த சுதந்திரக் கட்சி முடிவு

கொழும்பு, ஞாயிறு
ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின வருடாந்த மகாநாட்டை மே மாதம் 4-ந் திகதி பதுளையில் நடத்துவதென்று கட்சியின் நிர்வாகசபை முடிவுசெய்துள்ளது.

செஞ்சிலுவைச் சங்க மண்டபத்தில் நிர்வாகசபைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

சுதந்திரக் கட்சிப் பத்திரிகையான 'சிங்களே'யில் சில மந்திரிகள் இடதுசாரிக் கட்சிகளுடன் சேரத் திட்டமிடுவதாகவும், சில மந்திரிகள் கைலஞ்சம் வாங்கியதாகவும் வெளிவந்ததாகக் கூறப்படும் செய்திகள் பற்றி கூட்டத்தில் கடுமையான விவாதம் நடைபெற்றதுடன் 'சிங்களே' பத்திரிகை ஆசிரியரை அப்பதவியிலிருந்து நீக்கிவிடவேண்டுமெனவும் பலர் வற்புறுத்தினர். இது விஷயம் குறித்து விசாரணை செய்வதென்றும் 'சிங்களே' பத்திரிகையில் வெளியாகும் விஷயங்கள் குறித்து தீவிர கவனம் செலுத்துவதென்றும் சபை தீர்மானித்தது.

கம்பளை சாகிராக் கல்லூரிக்கு அதிக சலுகை அளிப்பதாக கல்வி மந்திரிமீது சில அங்கத்தவர்கள் குற்றஞ் சாட்டியதாவும் தம்மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு கல்வி மந்திரி பதிலளித்ததாகவும் கல்வி மந்திரியைப் பலர் ஆதரித்துப் பேசியதாகவும் தெரிகிறது.

கூட்டத்துக்குத் தலைமை வகித்த பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா, கட்சி அங்கத்தவர்கள் எல்லோரும் ஐக்கியமாக கட்சியின் நலனுக்கும், நாட்டின் நலனுக்குமாக உழைக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

# பட்டினியிலிருந்து விடுதலை வாரம்

கொழும்பு, ஞாயிறு
இவ்வாரம் உலகமெங்கும் பசியிலிருந்து விடுதலை இயக்க வாரம் கொண்டாடப்படுகிறது. இவ்வாரத்தையொட்டி நூற்றுக்கு மேற்பட்ட நாடுகள் அஞ்சல் தலைகள் வெளியிடவும் அவற்றினால் சேரும் பணம் முழுவதையுமோ அல்லது பகுதியையே ஐ. நா. உணவு விவாய ஸ்தாபனத்திடம் வழங்கவும் முடிவுசெய்துள்ளன.

இலங்கையில் இம்மாதம் 21-ந் திகதி தொடக்கம் 28-ம் திகதிவரை பசியிலிருந்து விடுதலை வாரம் கொண்டாடப்படவிருக்கிறது. இவ்வாரத்தின் பலதேசிய சேவைகளைச் செய்வதற்கு காணி விவசாய அமைச்சு திட்டமிட்டது. இவ்வாரத்தில்திட்டமிடப்பட்டுள்ள தேசிய சேவைப்படி 120 ஏக்கர் தரிசு நிலம் பயிர் சாகுபடிக்கேற்ற நிலமாக திருத்தியமைககப்படவிருக்கிறது. இதில் 300 தொண்டர்கள் பங்குபற்றுகிறார்கள். மற்றும் கிராமம் தோறும் விவசாயத்தின் முக்கியத்துவம் பற்றியும், அதிக உணவு பயிரிடப்படவேண்டியதன் அவசியம்பற்றியும் கூட்டங்கள் நடத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. அரசாங்க ஊழியர்களைக் கொண்டும் தேசிய சேவைகள் செய்விப்பதற்கு காணிவிவசாயஅமைச்சு திட்டமிட்டுள்ளது.

இவ்வாரத்தையொட்டி உலக நாடுகள்திரட்டும் பணம் உணவு விவசாய இலாகாவால் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சத்துள்ள உணவு வகைகளின் உற்பத்தி அதிகரிப்புக்கு செலவிடப்படும். இந்தியாவில் பசியிலிருந்து விடுதலைவாரத்தையொட்டி 15 சத அஞ்சல் தலை வெளியிடப்படவிருக்கிறது.

## அரபு யூனியன்

கெய்ரோ, மார்ச் 17
எகிப்து, ஈராக், சிரியா, ஆகிய மூன்று நாடுகளும் சமஷ்டி யூனியன் அமைப்பதற்கு ஒப்புகொண்டுள்ளதாகவும் ஆனால், சர்வஜன வாக்கெடுப்பின் பின்னரே இறுதி முடிவு செய்யப்படுமென்றும் அல அஹ்ரம்' என்ற பத்திரிகை கூறியது.

## பாடசாலை அதிபர் வேலை நீக்கம்

### விசாரணை வேண்டுமென 21எம்.பிக்கள் கோரிக்கை

கொழும்பு, ஞாயிறு
மொரட்டுவ வித்தியாலய ஆரம்ப பகுதியின் அதிபர் திரு. எஸ். டபிள்யு. எதிரிசூரியா, வேலையிலிருந்து நீக்கப்பட்டது சம்பந்தமாக விசாரணை நடத்தும்பொருட்டு விசாரணைக் கமிட்டியொன்றை நியமிக்கும்படி அரசாங்கக் கட்சி, எதிர்க்கட்சியைச் சேர்ந்த 21 எம்.பி.க்கள் கோருவார்கள் எனத் தெரியவருகிறது.

திரு. எதிரிசூரியாவிற்கும், மொறட்டுவ வித்தியாலயத்தின் மனேஜருக்குமிடையே தகராறு ஏற்பட்டதென்றும் இதுசம்பந்தமாக கல்வி இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளும், கல்வி அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகளும் நீதியற்ற முறையில் விசாரணை நடத்தியிருக்கிறார்களென்றும் தெரியவருகிறது.

விசாரணைக் கமிட்டியொன்றை நியமிக்கும்படி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி. லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி ஆகியவற்றைச் சேர்ந்த அங்கத்தவர்கள் கோரியுள்ளனர்.

## தென் ரொடீஷியா

சாலிஸ்பரி, மார்ச் 17
தென் ரொடீஷியாவின் எதிர்காலம்பற்றி, பிரிட்டன் ஒரு தீர்மானம் இயற்றவேண்டுமென ஆபிரிக்க தேசியத் தலைவர் திரு. ஜோசுவா என்கோமோ கேட்டுள்ளார். தென் ரொடீஷியாவில் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுவருவதாகவும் அதன் எதிர்காலம்பற்றி தீர்மானம் ஒன்றை பிரிட்டன் இயற்றவேண்டும் எனவும் கேட்டுள்ளார்.

## கிரிக்கட் போட்டிகள்

மட்டக்களப்பு, ஞாயிறு
மட்டக்களப்பில் வருடா வருடம் பொதுமக்களின் கவனத்தைப் பெரிதும்ஈர்க்கும்கல்லூரிகளுக்கிடையிலான கிரிக்கட் போட்டிகள் ஆரம்பமாகியுள்ளன. பல்வேறு வயதுப்பிரிவின் கீழ் போட்டியில் பங்கு கொள்ளும் , பல கல்லூரிக் கோஷ்டிகள் சென்ற ஆண்டைவிட நல்ல பயிற்சியை இம்முறை பெற்றிருப்பதாகக் கூறப்படுகிறது.

# விசர் நாய் தொல்லையை நீக்க நடவடிக்கை

## யாழ்ப்பாணம் மாநகரசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் மேயர் டாக்டர் எஸ். ஏ. தருமலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

யாழ்ப்பாண நகரத்தில் விசர் நாய்கள் அதிகரித்து வரும் மோசத்தை நீக்க நடவடிக்கை எடுத்தல்வேண்டும்.

"மாநகரசபை வட்டாரங்களின் தொகையை அதிகரித்த போது சிறுபான்மைத் தமிழருக்குப்பிரதிநிதித்துவம் வழங்க வசதிசெய்ய உள்ளூராட்சி அமைச்சர் தவறிவிட்டதாக வருத்தம் தெரிவிக்கும் இச்சபை, சிறுபான்மைத் தமிழருக்கும், ஏனைய சிறுபான்மையோருக்கும் போதிய பிரதிநிதித்துவம் கிடைக்கத்தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்படி உள்ளூராட்சி அமைச்சரை நிர்ப்பந்திக்கும்படி இச்சபை பிரதம மந்திரி அவர்களைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

மேலும் இது விஷயமாக சென்ற மாதக் கூட்டத்தில் சபையில் நிறைவேறிய தீர்மானத்தின்படி சிறுபான்மைத் தமிழர் 2000-க்குக் குறைவாக இருப்பினும் அவர்களுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்க வழிசெய்ய வேண்டுமென்று தீர்மானம் 2-ம், 3-ம் வட்டார கடலோர மக்களுக்கும் நியாயம் வழங்கவேண்டும் என்ற திருத்தத்துடன் நிறைவேறியது.

யாழ்ப்பாணத்திற்குரிய பெண் சுகாதார வைத்திய அதிகாரி பதவியை ஒழிக்க வேண்டுமென சுகாதார அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் திருத்தத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

---

## கௌரவிக்க ஏற்பாடு

மட்டக்களப்பு ஞாயிறு

பல்வேறு துறைகளில் முன்னணியில் திகழும் வித்துவான் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, பட்டிருப்புப பாராளுமன்ற உறுப்பினரும், தமிழரசுக் கட்சியின் தலைவருமான திரு. எஸ். எம். இராசமாணிக்கம், கிழக்கின் முதல் 'கலாகுமாரன்' பட்டம் பெற்ற பண்டிதர் வித்துவான் வீ. சி. கந்தையா, கல்முனைப் பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளர் திரு. ப. சிவசுப்பிரமணியம், பேராதனை பல்கலைக்கழக கல்விப் பகுதி விரிவுரையாளர் திரு. ப. சந்திரசேகரம், நகைச்சுவை எழுத்தாளரும் மட்டக்களப்புத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவருமான திரு. ரீ. பாக்கியநாயகம், கண்டி முஸ்லிம் பயிற்சிக் கல்லூரி தமிழ் விரிவுரையாளர் திரு. கோ. கணேசபிள்ளை ஆகியோரை தங்கப்பதக்கம் சூட்டிக் கௌரவிப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது. சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகும்வரை விழாவுக்கான திகதியை நிர்ணயிக்காத விழாக் குழுவினர் நாட்டுக்கூத்து, நடனம், இசை நிகழ்ச்சகளையும் சேர்க்கத் திட்டமிட்டுள்ளார்கள்.

மட்டக்களப்பு முதல் பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரை, திரு. எஸ். பொன்னுத்துரை, திரு. இளஞ்செழியன், இந்து மகளிர் மன்றச் செயலாளர் திருமதி கங்கேஸ்வரி கந்தையா, சைவப் புலவர் அருணசல தேசிகமணி, திரு. எம். ஏ. இரத்தின ராசா உட்பட பலர் இவ் விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை நிகழ்த்தவிருக்கிறார்கள்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### திங்கள் 18-3-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 பாமாலை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நிலைய ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வயலின்.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 எஸ். சிறீதாஸ் — புல்லாங்குழல், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 தமிழ் மூலம் சிங்களம், 9-30 தேர்ந்தஇசை, 9-45 ஜானகி சங்க, ஐயர் — பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2-00, இரவு 7-15)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு. 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-35 வி. கிருஷ்ண மூர்த்தி — பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 டி. பி. ரதன குமாரி — பாட்டு, 1-30 வாத்திய இசை, 2-10 வி. கிருஷ்ண மூர்த்தி — பாட்டு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 இசைப் பயிற்சி, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7-30 இம்மாதப் பாடல், 7-40 சர்வகலாசாலைகளுக்காக, 8-00 நமதுகடமை— பேச்சு, 8-45 தேசபக்திப் பாடல்கள், 9-15 வெற்றி வாகை — சித்திரம், 9-30 டி. பி. ரத்னகுமாரி — பாட்டு.

---

## 'லோகு'வுக்கு பிரிவுபசாரம்

மட்டக்களப்பு, ஞாயிறு

மட்டக்களப்புத் தமிழ்க் கலா மன்றத்தினர் கடந்த 25 வருடங்களாக வீரகேசரி ஞாயிறு இதழ் ஆசிரியராகவிருந்து தாயகம் திரும்பிச் செல்லவிருக்கும் திரு. லோகநாதனுக்கு பிரிவுபசார விழாவொன்றை மிகச் சிறப்பாக நடத்துவதற்கான முன் ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள். இவ் வைபவம் மட்டுநகர் மெதடிஸ்த மத்தியகல்லூரி விக்டோரியா மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

---

## சிறுவர்களுக்கு பயிற்சி

மட்டக்களப்பு, ஞாயிறு

மட்டக்களப்பில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள 'வைஸ்மென் கிளப்'பினர் நகரின் குடியேற்றப்பகுதிக்குச் சென்று அங்குள்ள சிறுவர்களுக்கு கிரிக்கட், உதைபந்தாட்டம் போன்ற விளையாட்டுகளைப் பயிற்றுவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி உப அதிபர் திரு. பிறின்ஸ் ஸி. காசிநாதர், உதவிக் கூட்டுறவுப்பகுதி ஆணையாளர் திரு. கனகசபை, கிழக்குப்பிராந்திய சாரணக் கமிஷனர் திரு. டானியேல், திரு. ஞானமுத்து யோன் ஆகியோர் பயிற்சி ஆட்டங்களைச் சொல்லிக்கொடுத்துவருகிறார்கள்.

## அகில இலங்கைத் தமிழ்மறைத் தேர்வு

கொழும்பு, ஞாயிறு

ஆண்டுதோறும தமிழ்மறைக் கழகம் நடத்தும் அகில இலங்கைத் தமிழ்மறைத் தேர்வு இவ்வாண்டில் செப்டம்பர மாதம் மூன்ருவது சனிக்கிழமையன்று (21-9-63) நடைபெறும்.

1-1-54-க்குப் பின் பிறந்தவர்களே தொடக்கப் பிரிவுக்கும், 1-1-49-க்குப் பின் பிறந்தவர்களே கீழ்ப் பிரிவுக்கும், 1-1-49-க்குப் பின் பிறந்தவர்களே மத்திய பிரிவுக்குந் தோற்றலாம். மேற்பிரிவுக்கு வயதுக் கட்டுப்பாடில்லை.

தொடக்கப் பிரிவுக்குத் திருக்குறளில் முதற் பத்து அதிகாரங்கள். கீழ்ப் பிரிவுக்கு 11-30 அதிகாரங்கள். மத்திய பிரிவுக்குத் திருக்குறள் முழுவதும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதலிடத்தைப் பெறுபவருக்குத் தங்கப் பதக்கமும், இரண்டாம், மூன்ரும், நான்காம் இடங்களைப் பெறுபவர்களுக்கு வெள்ளிப் பதக்கங்களும் பரிசில்களாக வழங்கப்படும்.

# மீன்பிடி வள்ளங்களுக்கு கடன் வசதி

## சீட்டிழுப்பு மூலம் தெரிவு

பருத்தித்துறை, திங்கள்

மீன்பிடி இயந்திரப் படகுகளின் பேரில் கடன் கோரி மனுப்பண்ணியவர்களது மனுக்கள் நேற்றையதினம் பருத்தித்துறை மீன் துறை இலாகா காரியாலயத்தில் பரிசீலனை செய்யப்பட்டதுடன் தெரிவு செய்யப்பட்ட மனுதாரர்களது பெயர்கட்கு சீட்டிழுப்பும் நடைபெற்றது. மீன்துறை இலாகா உதவி அதிபர், பருத்தித்துறை எம். பி. முதலான பலர் இங்கு சமுகமளித்திருந்தனர்.

மொத்தம் 200 மனுக்களில் தெரிவுசெய்யப்பட்டோரில் சீட்டிழுப்பின் மூலம் முதல் 20 பேருக்கும் கடன் வழங்கப்படும் என உதவி அதிபர் அறிவித்தார். தொண்டமனாறுக்கு மூன்றும், வல்வெட்டித்துறைக்கு ஆறும், பொலிகண்டிக்கு ஒன்றும், பருத்தித்துறைக்கு ஒன்பதும், கற்கோவளத்துக்கு இரண்டும் ஆக மொத்தம் 20 ஆகும்.

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கா் இன்று தாளையடியில் நடைபெற்ற தெரிவின்போது 6 வள்ளங்களுக்கு உத்தரவு வழங்கப்பட்டது.

முதல் நாளன்று பருத்தித்துறைக் காரியாலயத்தில் காங்கேசன்துறையில் இருந்து பலாலிவரை உள்ள கடற்றொழிலாளர் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு 13 பேருக்கு சீட்டிழுப்புமூலம் அதிர்ஷ்டம் கிடைத்தது. இத்தெரிவின்போது காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும் சமுகம் அளித்திருந்தார்.

இத்தெரிவுகள் சம்பந்தமாக மீன் துறை இலாகா உதவி அதிபர் நடாத்திய முறைபற்றி இரு பிரதிநிதிகளும் தங்களது திருப்தியைத் தெரிவித்தனர்.

சுமார் 17 ஆயிரம் ரூபாய் வரையில் இவ்வள்ளங்கள் ஒவ்வொன்றிற்கும் அரசாங்கம் உதவி வழங்கும் என அறியப்படுகிறது.

---

புத்தளம், ஞாயிறு

செருசெல என்ற இடத்தைச் சேர்ந்த 55வயதுள்ள இஸாபல் பெர்னண்டோ கஞ்சா வைத்திருந்ததற்காக புத்தளம் மாஜிஸ்டிரேட் அவருக்கு 4 மாத சிறைத்தண்டனை விதித்துள்ளார்.





கனபோ பொப்லின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் கந்தோர் ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் இடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோட், மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ. CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE TX/118

# வருஷ நடுப்பகுதியில் இடம்மாற்றுவதற்கு கண்டனம்

## அரசாங்க லிகிதர் சேவை யாழ். கிளை தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
அரசாங்க லிகிதர் சேவை சங்க யாழ்ப்பாணக்கிளையின் விசேஷ கூட்டம் திரு. எஸ். செல்லையா தலைமையில் யாழ்ப்பாணம் கச்சேரியில் கூடியது. அவ்வமயம் கீழ்க்கூறும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

"அரசாங்கம் காலஎல்லை முடிவடையாத உத்தியோகஸ்தர்களையும், காலஎல்லை முடிவடைந்தவர்களையும் கூட வருஷ நடுப்பகுதியில் இடம் மாற்றுவதால் அவர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் சொல்லொணாக் கஷ்டங்களை உண்டுபண்ண ஏதுவாக உள்ளது. எனவே இந்த கொள்கையை வன்மையாக கண்டிப்பதுடன், கௌரவ நிதி மந்திரி கடந்தகாலத்தில் இலாகாக்களில் ஏற்று நடத்தப்பட்ட கொள்கைகளின்படி செலாற்ற வேண்டுமென்றும்கோருகிறோம்

இதுவிஷயமாக நேர்முகபேட்டி கொடுக்கும்படி தந்திஒன்று இன்று மந்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

கீழ்கண்டோர் 1963-ம் ஆண்டு நிர்வாகஸ்தர்களாகதெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் எஸ். செல்லையா. உபதலைவர்கள் எஸ். வைரமுத்து, ஜி. மரியனுயகம். செயலாளர் கே. பரமானந்தன், உப செயலாளர் எம். வீரசேனு. ஒன்பது பேர் கொண்ட ஓர் கமிட்டியும் தெரிவுசெய்யப்பட்டது.

## பதஞ்சலிசாஸ்திரி தகனம்

சென்னை, மார்ச் 17
காலஞ்சென்ற முன்னுள் இந்திய சுப்ரீம்கோர்ட் பிரதம நீதிபதி ஸ்ரீ பதஞ்சலி சாஸ்திரியின் சடலம் இன்று பிற்பகல் தகனம் செய்யப்பட்டது. சென்னை கவர்னர் மேதி, மந்திரிகள், நீதிபதிகள் ஆகியோர் அவரது இல்லத்துக்குச் சென்று தங்கள் அனுதாபத்தை தெரிவித்தனர். இந்திய பிரஸ் டிரஸ்ட் ஸ்தாபனத்தின் சார்பில் சடலத்தின் மீது ரோஜா மலர் வளையம் ஒன்று வைக்கப்பட்டது.

## பொலிஸ் துப்பாக்கி பிரயோகம்

சென்னை, மார்ச் 17
மதுரையிலிருந்து 15 மைல் தூரத்திலுள்ள திருமங்கலத்துக்கருகே ஒரு கும்பலின்மீது பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் 5 பேர் கொல்லப்பட்டனர். 24 பேர் காயமடைந்தனர். சடலங்கள் மதுரைக்கு எடுத்துச் செல்லப்பட்டன. காயமடைந்த உதவி பொலிஸ் சுபரீண்டன் பொலிஸ் மாஜிஸ்ட்ரேட் ஆகியோர் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

## மாற்றசபைத் தலைவருடன் பேட்டி

யாழ்ப்பாணம், திங்கள்
மாற்றச் சபைத் தலைவரும் உதவி வித்தியாபதியுமான திரு. ப. துரைசிங்கத்தை, தேசிய தமிழ் ஆசிரியர் சங்கத்தினர் எதிர்வரும் சனிக்கிழமை காலை பேட்டி காணுவார்கள்.

## கி. மு. சங்கம்

காரைநகர், ஞாயிறு
காரைநகர் வடக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் 10-வது வருடாந்தக் கூட்டம் வலந்தலை அமெரிக்க மிஷன் பாடசாலையில் தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. சாமுவேல் தம்பையா தலைமையில் நடைபெற்றது. நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. கந்தையா. உப தலைவர் திரு. க. நல்லதம்பி, காரியதரிசி திரு. சு இராசசேகரம், தனதிகாரி திரு. ச. விசுவநாதன், 16 பேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவுசெய்யப்பட்டது.

## பெவரிட்ஜ் பிரபு காலமானர்

லண்டன், மார்ச் 17
பொருளாதார நிபுணர் பெவரிட்ஜ் பிரபு நேற்று ஒக்ஸ்போர்டில் காலமானர். அவருக்கு வயது 84.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)
கைப் பார்த்தே ராமதாஸ் இவ்விதம் கூறியது.

'யுத்த சக்திகளை அடக்கி உலகில் அமைதிநிலவ, தெய்வ அருள் வேண்டும். மனிதன் குழப்பவேபார்க்கிருன். ஆனல் தெய்வ சக்தியை மனிதன்மிஞ்ச முடியாது. முடியுமா? சத்யமே வஜெயதி. உண்மையே வெல்லும். நாசகாரதீய சக்திகளை தெய்வம் அடக்கும். உலகெல்லாம் ஒரே குடும்பமாக்கவே தெய்வ சக்திவேலை செய்கிறது, அவ்வித கடவுளில் நாம் நம்பிக்கை வைப்போம் அவரிடமிருந்து சக்தியும் உணர்ச்சியும் பெறுவோம். பிறகு உலகமே பத்திரமாக இருக்கும் என்ருர்.

சுவாமி கூறியதைஇவ்வளவு நீளமாக இங்கு வெளியிட்டதற்காக அன்பர்கள் மன்னிக்கவேண்டும். சிலபுண்ணியவான்கள் யுத்தம் வரவேண்டுமென்றும் ஆவல் காட்டுகிருர்கள். அப்படிவந்தால்தான் ஒரு தட்டுத்தட்டி உடன் பெரிய பணக்காரனுகலாம் என்பது அவர்களது மனக்கோட்டை

பண ஆசை மனதைக் கெடுக்கிறது. அந்தப் பணமே உயிருக்கும்கூட சிலசமயம் ஆபத்தாக முடிவதைப் பார்க்கிறோம். சாதாரண மனிதருக்குள்ள மனநிம்மதியும் அமைதியும் பணக்காரரில் பலருக்கு உண்டா? மனநிம்மதியற்ற வாழ்வு என்ன வாழ்வு!

* * *

பண்டை வல்வினை
பற்றறுகரும் வகை
உண்டு சொல்லுவன்
கேண்மின் ஒளிகிளர்
வண்டுசேர் பொழில்
சூழ்திரு மாற்பேறு
கண்டு கைதொழத்
தீருங் கவலையே.
— திருநாவுக்கரசர்

# "கோரிக்கை நிராகரிக்கப்பட்டால்... அரசாங்கத்துக் கெதிராக வழக்கு தாக்கல் செய்வோம்"

கண்டி, ஞாயிறு
"அகில இலங்கை கிராமத் தலைமைக்காரர் யூனியன் சமர்பித்த கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படாவிட்டால் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியநிலைமை தங்களுக்கு ஏற்படும்" என்று அகில இலங்கை தலைமைக்காரர் யூனியன், பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்குத் தெரிவித்துள்ளது.

தற்பொழுது சேவையிலுள்ள கிராமத் தலைமைக்காரர்கள் எல்லாரும் கிராம சேவகர்கள் சேவையில் சேர்க்கப்பட்டு 55 வயதான அவர்கள் வேலை செய்வதற்கு அனுமதியளிக்காவிட்டால் அகில இலங்கை கிராமத் தலைமைக்காரர் யூனியன் சட்டரீதியான நடவடிக்கையெடுப்பதுடன் இது சம்பந்தமான தனது வழக்கை சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யும் என்றும் யூனியன், பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்குத் தெரிவித்துள்ளது.

அகில இலங்கை கிராமத் தலைமைக்காரர் யூனியன் பிரதமருக்கு அனுப்பியுள்ள மகஜரில் தெரிவிததுள்ளதாவது:

"தற்பொழுதுள்ள கிராமத் தலைமைக்காரர் தங்களது ஓய்வு பெறும் வயதான 55 வயதுவரை கிராமசேவகர்கள் சேவையிலிருப்பதற்கு அனுமதியளிப்பது சம்பந்தமான எங்களது கோரிக்கை குறித்து இரண்டு வாரங்களுக்குள் எங்களுக்கு சரியான பதில் கிடைக்காவிட்டால் இந்த யூனியன் தனது இரண்டாவது தீர்மானத்தை அமுல் நடத்த வேண்டிவரும். சட்டரீதியான முறையில் நடவடிக்கை எடுப்பதே யூனியனின் இரண்டாவது தீமானமாகும்."

## வேலை நிறுத்தம் வாபஸ்

ஹெல்சிங்கி, மார்ச் 17
ஊதிய உயர்வு விஷயமாக யூனியனுடன் உடன்பாடு ஏற்பட்டதால் 30,000 அரசாங்க ஊழியர்கள் வேலைநிறுத்த நோட்டீஸ் வாபஸாயிற்று ஆனல் டெலிபோன் ஆபரேடர்களுக்கு உடன்பாடு விஷயம் தெரியாதாகையால் நள்ளிரவில் அவர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். 25,000 ஆசிரியர்கள் தமது வேலைநிறுத்தத்தை வாபஸ் பெற்றனர், ரயில்வே தபால், சங்க ஊழியர் 20,000 பேர் மார்ச் 12லிருந்துவேலைக்கு வரவில்லை.

## தென்கொரியா புதிய மந்திரிசபை!!

லண்டன், மார்ச் 17
தென்கொரியாவின் புதிய மந்திரி சபை நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது,

புதிய மந்திரி சபையில் ராஜினமாச் செய்த மந்திரி சபையில் பதவிவகித்தவர்களில் பலர் இடம்பெற்றுள்ளதாகவும் நாலு புதிய மந்திரிகள் இடம் பெற்றுள்ளதாகவும் தகவல் கிடைத்துள்ளது.

தொடர்ந்துஇராணுவ ஆட்சி நிலைத்து நிற்க மக்கள் விரும்புகிருர்களா இல்லையா என்பது பற்றி சர்வ ஜனவாக்கெடுப்பி நடத்த பிரதம ஆட்சி சபையின் தலைவர் கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மக்கள் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்தை விரும்பினல் எதிர்வரும் ஆகஸ்டில் தேர்தல் நடத்தப்படலாம் எனவும் தெரிவிக்கபபட்டுள்ளது. இங்கு அரசியல் நடவடிக்கைகள் யாவற்றிக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளன.

## 'தர்மவழியில் தொண்டு' மாணவர்களுக்கு அறிவுரை

கொடிகாமம், ஞாயிறு
"அன்னியராட்சியின்போது சமய அடிப்படையில் கல்வி போதிக்கப்படாமல் தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் நிலை ஏற்பட்டிருந்தது. இன்று நாம் சுதந்திரம் அடைந்தபின் அந்நிலை மாறிவிட்டது. நமது சூழலில் சமயவளர்ச்சியிலும், பண்பாடு கலாச்சார வளர்ச்சியிலும் ஒருபுதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது. இந் நிலையில் கடவுள் வழிபாட்டில் நாம் நமது மனத்தைச் செலுத்தப் போதிய சந்தர்ப்பமும் வசதியும் அளிக்கப்படிருககின்றது. மாணவர்கள் தருமவழியில் நின்று உலகுக்கு உத்தம தொண்டாற்றவேண்டும்.

பண்பாடு வளர்ச்சிபெற கடவுள்பக்தி வேண்டும் பாடசாலையில் மாத்திரமன்றி உங்கள் வீட்டிலும் தினமும் இப்படியான பிரார்த்தனைசெய்ய வேண்டும்.உங்கள் வீடு ஓர் ஆலயமாகப் பரிமளிக்கவேண்டும்.மேற்கண்டவாறு வண்ணர் பண்ணை பெருமாள் கோவிலடி சைவாங்கில வித்தியாசாலை மாணவர்களின் கூட்டுப்பிரார்த்தனை, அங்கு புதிதாக அமைக்கப்பெற்ற புதிய மணிமண்டபத்தில் முதல் முதலாக நடைபெற்றபோது பேசுகையில் ஆசிரியர் திரு. கே. சோமசுந்தரம் கூறினர்.

மாணவர்கள் பக்திபரவசமாகக் குழுமி நின்று பிரார்த்தனைப்பாடல்களை நயமாகப் பாடினர்.

## 'வேலை நேரத்தை குறைக்கவும்'

யாழ்ப்பாணம், ஞாயிறு
வேலை நேரத்தை 8 மணித்தியாலமாக குறைக்க வேண்டுமென்றும்,வாரத்தில் ஒரு நாள் லீவு கொடுக்கவேண்டுமென்றும், இரவு வேலை அலவன்ஸ் அதிகரிக்கப்பட வேண்டுமென்றும், கூறும் கோரிக்கைகள் வட இலங்கை 'பிறைவேட்' ஆஸ்பத்திரி தொழிலாளர் சங்கத்தின் நிர்வாகசபையில் நிறைவேற்றப்பட்டு யாழ்ப்பாணம் பிஷப் திரு. குலேந்திரன், வைத்தியசபைக் காரியதரிசி திரு. ஜெயசிங்கம், இணுவில், மானிபபாய் ஆஸ்பத்திரிகளின் வைத்திய சுப்பிறிண்டன்ட் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

அக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு, அனுப்பப்பட்ட மற்றும் கோரிகக்கைகள் பின்வருமாறு:

"ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் தாதிகளின் உடைகளை அதிகரிக்கவேண்டும். ஆஸ்பத்திரியினுல் வரிகள் கடடப்பட வேண்டும். பிணைப்பணக் காசைச் சம்பளத்திலிருந்து கழிப்பதை உடனடியாக நிறுத்தவேண்டும்".

## ரயில் நேரம்

| யாழ்ப்பாணம் | | கோட்டை | |
|---|---|---|---|
| காலை | 5-40+ | பி. ப. | 1-20 |
| காலை | 7-25 | மாலை | 7-15 |
| பி. ப. | 2-26 | இரவு | 10-15 |
| மாலை | 6-36 | காலை | 5-15 |
| மாலை | 8-52* | காலை | 6-15 |

| கோட்டை | | யாழ்ப்பாணம் | |
|---|---|---|---|
| காலை | 6-00 | பி. ப. | 1-25 |
| காலை | 6-45 | மாலை | 5-52 |
| பி. ப. | 2-15 | இரவு | 9-55 |
| மாலை | 7-15 | காலை | 5-03 |

+ஞாயிறு இல்லை
*ஞாயிறு மட்டும்

மகத்தான 2-வது வாரம்!
வீர காவியம் !!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
விஜயா (மட்டக்களப்பு) ராஜ் (நீர்கொழும்பு) விஜிதா (அட்டன்)
மொடர்ன் (பதுளை) தீவொளி (நுவரேலியா) ஜெமினி (குருகலை) ஸ்ரீகிருஷ்ணு (திருக்கோணமலை)
மற்றும் திரைகளில்!
தொண்டு செய்யும் அடிமை உனக்கு சுதந்திர நினைவோ? என்று கொக்கரித்த வெள்ளையரின் கொட்டத்தை முறியடித்தான் — கப்பலோட்டிய தமிழன்.
★ பார்த்தோர் பரவசப்படுகிருர்கள்!
★ பார்க்காதோர் பார்க்கத் துடிக்கிருர்கள்
சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
சாவித்திரி
முத்துலட்சுமி
வி. நாகையா
குமாரி ருக்மணி
எஸ். வி. ரங்கராவ்
ஜெமினி சந்திரா
எஸ். வி. சுப்பையா
ஏ. கருணாநிதி




மற்றும் பலர் நடிக்கும்
பத்மினி பிக்சர்ஸ்
கப்பலோட்டிய தமிழன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
பி. யு. சின்னப்பா, எம். எஸ். சரோஜினி
நடித்த
ஜெகதலப்ரதாபன்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.